# அரசு ஊழியர்

ஜனவரி 2017

மலர் : 38 இதழ் : 1

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
வெளியிடுபவர் : இரா.பாலசுப்பிரமணியன்

ஆசிரியர் : ஆர்.தமிழ்செல்வி

ஆசிரியர் குழு

இரா.பாலசுப்பிரமணியன், மு.அன்பரசு,
பி.எஸ்.அப்பர், கே.எம்.தியாகராஜன்,
பெ.கிருஷ்ணசாமி, ச.இ.கண்ணன்

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்:வைகை பிரிண்டர்ஸ்&பப்ளிஷர்ஸ்,*
*2/38, குயவர் வீதி, ஜோன்ஸ் சாலை,*
*சென்னை - 600 015.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## உள்ளே...


| | |
|---|---|
| கவிதைகள் | 2,3,9,28 |
| அறைகூவல் தீர்மானம் | 6 |
| மாநிலந் தழுவிய ஆர்ப்பாட்டம் | 10 |
| மாவட்ட மாநாடுகள் | 16 |
| காத்துக் கிடக்கின்றனர் | 22 |
| நோய் தடுப்பு வழிகள் | 25 |
| அரசியலமைப்பு சட்டம் | 29 |
| வட்டக் கிளை மாநாடு | 31 |
| துறைவாரி சங்க நிகழ்வு | 33 |


## வேண்டாம் இம்மாதிரி முன்மாதிரி

ஆண்டோர் மீதான வெறுப்பு
ஆள்வோர் முன்மாதிரியாய் பொறுப்பு

சரியாய் பயன்படுத்திக் கொண்டீர்
மிகைகாய் தேர்தலில் வென்றீர்

முன்மாதிரி குஜராத் முதல்வர்
நன்மதிப்பாய் நாட்டின் பிரதமர்

அரை கிணறு தாண்டியாயிற்று
பாழ் கிணற்றில் தள்ளியாயிற்று

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்
உள்ளே இருக்குமாம் ஈறும் பேனும்

தனக்கான உணவு எளிதாய்
உண்டாலும் கொல்லும் மாதிரி

செத்த பசு தூக்க மாட்டீர் - தூக்கும்
மானுட வதை செய்வீர்

பசுபாதுகாப் பென்பீர் - மாதிரி
தேசமெங்கும் வேண்டுமென்பீர்

தடியெடுத்தவ னெல்லாம் - இனி
தண்டல்கார னெனும் மாதிரி

என்னைத் தாக்கிப் பின்தாக்க
முன்னை ஆடிய நாடகம் வேண்டாம்

குடிக்கவும் நீரின்றி அலைய - மது
குடிக்கவும் வசதி கள்ளத் தனமாய்

இம்மாதிரி நாடெங்கும் - குஜராத்
முன்மாதிரி வேண்டாம்

தொழிலாளர் உரிமை மிதித்து - சலுகை மழை
முதலாளிக் கர்ப்பணிப்பீர்

வேண்டாமே இம்மாதிரி - முன்மாதிரி
எல்லாமே பொய் மாதிரி

அடிமேல் அடிஅடிப்பீர் - பொய்யை
மெய்யாக்கி மாதிரி என்பீர்

கருப்புப்பண வேட்டை என்றீர் - சாமானியர்
கணக்கில் வரவென்றீர்

இருப்புப் பணமே பறிபோகும் - இம்மாதிரி
விருப்பமிலை வெறுப்பேதான்

திமிங்கிலங்கள் தப்பின - எனில்
அயிரை மீன்கள் செத்தன

செல்லாத பணத்தால் செத்த உயிர்
எண்பதுக்கு மேல் நீங்கா துயர்

இனியொரு விதி செய்வோம் - பட்டது
இனி படாமலிருக்க உறுதியேற்போம்

வேற்றுமையில் ஒன்றுபட்டு - மாற்றம்
வென்றெடுக்க முடிவு கட்டு.

- **பெரணமல்லூர் சேகரன்**

# அரசு ஊழியர் தினம்

*அன்னையர் தினம் உண்டு!*
*தந்தையர் தினம் உண்டு!*
*காதலர் தினம் உண்டு!*
*மகளிர் தினம் உண்டு!*

*தொழிலாளர் தினம் உண்டு!*
*ஆசிரியர் தினம் உண்டு!*
*ஓய்வூதியர் தினம் உண்டு!*
*அரசு ஊழியர் தினம் ஏன் இல்லை...?*

*பிப்ரவரி 10ஆக வைக்கலாமா?*
*ஜூன் 22ஆக வைக்கலாமா?*
*ஜூலை 2ஆக வைக்கலாமா?*
*அனைத்து சங்கமும் தீர்மானிப்பீர்...!*

*சிந்திப்பீர் முடிவெடுப்பீர் நன்னாள்!*
*அந்நாள் அரசு ஊழியர் தினமாகட்டும்!*
*அரசு ஊழியர் தினம் உருவாகட்டும்!*
*அரசு ஊழியர் தினம் உருவாகட்டும்!*

- **வைக்குயில்**, மதுரை

# தரணியில் எது நன்நாள்!

சாவின் விழிம்புதன்னில்
சக மனுசன் மிதக்கையிலே. . . .
எதிரி நாட்டு ராணுவத்தை
எதிர்கொள்ளும் வீரனைப்போல் . . . .
ஓட்டு வேட்டையாடச் செல்லும்
உதவாக்கரை தலைவரைப்போல் . . .
வேரெதுவும் தெரியாத
வேற்று கிரக உயிரினம்போல் . . . .
உதவாமல் போகும் நீ - மனித
உயிரினம் என்பதுவும் சரியாமோ !
நேற்று . . . .
உனக்காக உழைத்தோரை
ஒரு நொடியில் மறந்துவிட்டாய் !
இன்று . . . .
தொடர்ந்து உணவு ஈனும் உழவர்களை
உயிரின்றி கண்டுவிட்டாய் !
நாளை . . . .
உனக்கான சவக்குழிக்கு உடன் செல்க
கடப்பாரை மண்வெட்டியோடு !
ஊருக்காய் உழைப்போரை
ஒரு நொடியில் மறந்திடவும் . . . .
தனக்காக வாழ்வோரை
தலையில் வைத்து போற்றிடவும் . . . .
தயக்கமின்றி முன்செல்லும்
தறிகெட்ட தமிழர்களே!
ஊருக்கே உணவளிக்கும்
உத்தமனாம் உழவன் தன்னை
தலையில் வைத்து சுமக்கும் நாளே
தரணியில் இனி நன்நாளாகும்!

- **நாகை ஏ.ட்டீ.ஏ.**

வடிவமைப்பு :
சே.குப்புசாமி
தொடர்புக்கு :
98409 35538, 72995 21677
அலுவலகம் : 044-4210 4020

# 06.01.2017 முதல் 08.01.2017 வரை திருவண்ணாமலையில் நடைபெற்ற அரசு ஊழியர் சங்க மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அறைகூவல் தீர்மானம்

தமிழக அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதியம், ஊதிய மாற்றம், ஊதிய முரண்பாடுகளை களைதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம், தொகுப்பூதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் போன்ற கொத்தடிமை ஊதியத்தில் நியமனம் செய்யும் முறையை ரத்து செய்து காலியாக உள்ள 4 லட்சம் பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் நிரப்புதல் உள்ளிட்ட ஏராளமான கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தமிழக அரசை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஏராளமான இயக்கங்களை நடத்தி யுள்ளது.

2011ஆம் ஆண்டு பொறுப்பேற்ற அதிமுக அரசு நமது கோரிக்கைகளை நிறைவேற்றாத நிலையில் 2016 ஜனவரி 22 பெருந்திரள் முறையீடு, பிப்ரவரி 10 முதல் 19 வரை காலவரையற்ற வேலை நிறுத்தம், பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் குறிப்பாக பெண்கள் பெருமளவில் பங்கேற்ற மறியல் போராட்டம், பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்ற காத்திருப்பு போராட்டம் போன்ற வீரஞ்செறிந்த போராட்டத்தின் பின்புலத்தில் அன்றைய தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் சட்டமன்ற விதி 110ன்கீழ் 13 அறிவிப்புகளை வெளியிட்டார்.

குறிப்பாக தமிழக அரசு ஊழியர்கள் 1.4.2003க்கு பிறகு பணியில் இணைந்த வர்களுக்கு அமல்படுத்தப்பட்ட புதிய பென்சன் திட்டத்திற்கு பதிலாக பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கான வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களது குடும்பப் பாதுகாப்பு நிதி, கருணை அடிப்படை நியமனம் பெற்ற ஊழியர்களுக்கான பணிவரன் முறை உள்ளிட்ட கோரிக்கைளை பெற்றுள் ளோம்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு 1.1.2016 முதல் ஊதிய மாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில் தமிழக அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டுமெனவும், அதற்கான ஊதியக் குழுவை உடனே அமைக்க வேண்டுமென வும், ஊதிய மாற்றம் செய்யும் வரை இடைக் கால நிவாரணமாக 20 சதவீதம் தொகையை வழங்க வேண்டுமெனவும், வல்லுநர் குழு நடத்திய பேச்சுவார்த்தை அடிப்படையில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமலபடுத்த வேண்டும், சிறப்பு காலமுறை ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம், காலியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர் பாக மீண்டும் 2016இல் ஆட்சிப் பொறுப்பேற்ற அதிமுக அரசு நிறைவேற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மௌனமாக இருக்கிறது.

2006 ஊதிய மாற்றத்திற்கு பிறகு 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், மத்திய அரசு ஊழியர்களுக்கு 1.1.2006 முதல் அமல்படுத்தியுள்ள பின்னணியிலும் தமிழக அரசு ஊழியர் ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

இந்தச் சூழலில் ஜனவரி 6 முதல் 8 வரை நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 12ஆம் மாநில மாநாட்டில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்களை அணிதிரட்டி கீழ்க்கண்ட இயக்கங்களை நடத்திட இம்மாநாடு முடிவு செய்கிறது.

## கோரிக்கைகள்

★ புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சனை வழங்கிட வேண்டும்.

★ 8வது ஊதிய மாற்றக் குழுவை உடனே அமைத்து ஊதிய மாற்றம் பெற்றிட

★ 1.1.2016 முதல் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் பெற்றிட

★ சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் பெற்றிட

★ தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறையிலான பணி நியமனங்களை ரத்து செய்து காலியாகவுள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்திட

★ சாலைப் பணியாளர்களின் 41 மாத பணிக்காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும்

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தில் அரசு ஊழியர்கள் பின்வரும் இயக்கங்களில் பங்கேற்றிட அறைகூவி அழைக்கிறது. மேலும், அரசு ஊழியர் - ஆசிரியர் கோரிக்கைகளை வென்றெடுக்க ஜேக்டோ - ஜியோ எடுக்கும் முடிவுகளை வெற்றி பெறச் செய்திடவும் இம்மாநாடு தீர்மானித்தது.

## இயக்கங்கள்

❖ ***02.02.2017*** **பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்கும் மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் உண்ணாவிரதம்**

❖ ***15.03.2017*** **மாவட்டத் தலைநகரங்களில் பேரணி**

❖ ***18.03.2017 (ம) 25.03.2017*** **வேலை நிறுத்த ஆயத்த மாநாடு**

❖ ***25.04.2017*** **முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம்**

❖

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 12வது மாநில மாநாட்டில் 2017-18ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்ட பட்டியல்

| | | |
|---|---|---|
| **மாநிலத் தலைவர்** | | தோழர் **மு.சுப்பிரமணியன்** |
| **மாநில பொதுச் செயலாளர்** | | தோழர் **மு.அன்பரசு** |
| **மாநிலப் பொருளாளர்** | | தோழர் **எம்.தங்கராஜ்** |
| **மாநில துணைத் தலைவர்கள்** | 1. | தோழர் **ந.குமாரவேல்** |
| | 2. | தோழர் **ஆ.செல்வம்** |
| | 3. | தோழர் **எஸ்.தமிழ்ச்செல்வி** |
| | 4. | தோழர் **சு.பார்த்திபன்** |
| | 5. | தோழர் **மொ.ஞானத்தம்பி** |
| | 6. | தோழர் **மு.சுப்பிரமணியன்** |
| **மாநிலச் செயலாளர்கள்** | 1. | தோழர் **இரா.பன்னீர்செல்வம்** |
| | 2. | தோழர் **சி.ஆர்.ராஜகுமார்** |
| | 3. | தோழர் **என்.ஜனார்த்தனன்** |
| | 4. | தோழர் **தி.கலைச்செல்வி** |
| | 5. | தோழர் **எம்.சௌந்தர்ராஜன்** |
| | 6. | தோழர் **ஏ.பெரியசாமி** |
| **தணிக்கையாளர்கள்** | 1. | தோழர் **ஏ.ட்டி.அன்பழகன்** |
| | 2. | தோழர் **ஆர்.நடராஜன்** |

# திருவண்ணாமலையில் நடைபெற்ற 12வது மாநில மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகளின் விவரம்

**இனம்**

| | |
|---|---|
| ஆண்கள் | 481 |
| பெண்கள் | 96 |

**வயது**

| | |
|---|---|
| 18 முதல் 25 வரை | 1 |
| 26 முதல் 35 வரை | 46 |
| 36 முதல் 45 வரை | 139 |
| 46 முதல் 55 வரை | 314 |
| 55 முதல் 60 வரை | 77 |

**கல்வித் தகுதி**

| | |
|---|---|
| பள்ளி இறுதி வகுப்பு வரை | 215 |
| பிளஸ் 2 வரை | 48 |
| பட்டப் படிப்பு | 56 |
| பட்டயப் படிப்பு | 39 |
| தொழில்நுட்பம் | 131 |
| பட்ட மேல்படிப்பு | 88 |

**அரசு ஊழியர் சங்கத்தில் வகிக்கும் பொறுப்பின் பெயர்**

| | |
|---|---|
| மாநிலம் | 14 |
| மாவட்டம் | 223 |
| வட்டக் கிளை | 295 |
| எதுவும் இல்லை | 45 |

**துறை சங்கத்தில் வகிக்கும் பொறுப்பின் பெயர்**

| | |
|---|---|
| மாநிலம் | 184 |
| மாவட்டம் | 229 |
| வட்டக் கிளை | 39 |
| ஒன்றியம் | 43 |
| எதுவும் இல்லை | 82 |

**சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதால் பணி நீக்கம் செய்யப்பட்ட காலம்**

| | |
|---|---|
| 1 முதல் 10 நாட்கள் | 17 |
| 11 முதல் 20 நாட்கள் | 18 |
| 21 முதல் 30 நாட்கள் | 104 |
| 30க்கு மேல் | 59 |
| எதுவும் இல்லை | 379 |

**சிறை சென்ற காலம்**

| | |
|---|---|
| 1 முதல் 10 நாட்கள் | 101 |
| 11 முதல் 20 நாட்கள் | 68 |
| 21 முதல் 30 நாட்கள் | 23 |
| 30 நாட்களுக்கு மேல் | 13 |
| எதுவும் இல்லை | 372 |

**மறியல் கலந்து கொண்ட அனுபவம்**

| | |
|---|---|
| பங்கேற்றோர் | 551 |
| எதுவும் இல்லை | 26 |
| அரசு ஊழியர் சந்தாதாரர் | 568 |
| எம்ப்ளாயீஸ் போரம் சந்தாதாரர் | 372 |
| இரத்த தானம் செய்தோர் | 227 |
| உறுப்பு தானம் பதிவு செய்தோர் | 3 |
| உடல் தானம் பதிவு செய்தோர் | 18 |
| கண் தானம் பதிவு செய்தோர் | 58 |

பணியின் தன்மை

| | |
|---|---|
| காலமுறை ஊதியம் | 473 |
| சிறப்பு காலமுறை ஊதியம் | 96 |
| மதிப்பூதியம் | 3 |
| தொகுப்பூதியம் | 5 |
| பழைய பென்சன் திட்டத்தில் | 360 |
| புதிய பென்சன் திட்டத்தில் | 123 |
| சிறப்பு பென்சன் திட்டத்தில் | 94 |

❖

# 11.01.2017 மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

**ப**ணமதிப்பு நீக்கத்தால் கடந்த 08.11.2016 முதல் பொது மக்களும் அரசு ஊழியர்களும் மிகுந்த இன்னல்களுக்கு ஆளாகியுள்ள சூழலில், மக்கள் புழக்கத்திற்கு பயன்படும் வகையில் ரூ. 500 மற்றும் ரூ. 100 நோட்டுகளை தேவையான அளவில் வழங்கிட வேண்டும், உச்சவரம்பின்றி ஏ.டி.எம் மற்றும் வங்கிகளில் பணம் எடுக்க ஆவன செய்திட வேண்டும், பணப் பிரச்சனையால் உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தியும்...

மத்திய அரசு வழங்கியது போல் தமிழக அரசு ஊழியர்களுக்கும் ரூ. 7000 இந்த ஆண்டிற்கான பொங்கல் போனஸும், கடந்த ஆண்டிற்கான நிலுவைத் தொகையும் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்தியும்...

கடந்த 06.01.17 முதல் 08.01.17 வரை திருவண்ணாமலையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மாநாட்டு முடிவின்படி தமிழகம் முழுவதும் 11.01.2017 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக...

**கிருட்டிணகிரி**

ஓசூர், தேன்கனிகோட்டை, சூளகிரி, கிருஷ்ணகிரி ஆகிய வட்டக் கிளைகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சக்திவேல், மணி, அன்பழகன், காமராஜ் ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட நிர்வாகிகள் பி.சந்திரன், சி.பி.ஜெயராமன், ஆர்.நடராஜன், ஆர்.நாகராஜன், வி.தேவராஜ், எம்.கிருஷ்ணன், வி.கருப்பசாமி, கே.தேன்மொழி,









கே.ஜெயலட்சுமி, பி.பெருமாள் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பிஎஸ்என்எல் ஊழியர் சங்கத்தின் அழகிரிசாமி வாழ்த்தி பேசினார். 600க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

**நாகப்பட்டினம்**

மாவட்டத் தலைமை மருத்துவமனை முன்பு வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரை யாற்றினார். நாகை தொழிற் சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் சிறப்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் ப.அந்துவன்சேரல், வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் உள்ளிட்டு நூற்றுக்கும்



மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். இறுதியாக செயற்குழு உறுப்பினர் ப.ஜீவானந்தம் நன்றி கூறினார்.

மதியம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டப் பொருளாளர் வி.மாரிமுத்து தலைமை தாங்கினார்.




மாலை **நாகை வட்டாட்சியர்** அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார்.

**கீழ்வேளூர்** வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் மோகன் தலைமை தாங்கினார்.




**வேதாரண்யம்** வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் தமிழ்வாணன் தலைமை தாங்கினார்.

**சீர்காழி** வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் எல்.பிரேம்சந்தர் தலைமை தாங்கினார்.

**மயிலாடுதுறை** வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் ராஜரெத்தினம் தலைமை தாங்கினார்.

**குத்தாலம்** வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் சாமி.மனோகரன் தலைமை தாங்கினார்.

**தரங்கம்பாடி** வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டச் செயலாளர் சி.வாசுகி தலைமை தாங்கினார்.

மாவட்டம் முழுதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 360 பெண்கள் உட்பட 1000க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

### தருமபுரி

மாவட்டம் முழுவதும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. தருமபுரியில் வட்டத் தலைவர் ஜி.மணிவேல் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் மாவட்டத் துணைத் தலைவர் எஸ்.கே. கனகராஜ், வட்டச் செயலாளர் சிங்காரவேலன் ஆகியோர் உரையாற்றினர். பென்னாகரத்தில் வட்டத் தலைவர் கே. லட்சுமி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், மாவட்ட இணைச் செயலாளர் சி.காவேரி ஆகியோர் பேசினர்.



காரிமங்கலத்தில் வட்டத் தலைவர் பி.நாகராஜன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் எம். சிவப்பிரகாசம், மாவட்ட இணைசெயலாளர் பி.ராஜேஸ்வரி ஆகியோர் உரையாற்றினர். அரூரில் வட்டத் தலைவர் கே.சுவாமிநாதன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு மாவட்ட துணைத் தலைவர் பி.எஸ். இளவேனில் ஆகியோர் பேசினர். பாலக்கோட்டில் வட்டத் தலைவர்

குணசேகரன் தலைமையிலும், நல்லம் பள்ளியில் வட்டத் தலைவர் மோகன்ராஜ் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**சேலம்**

மேட்டூர் வட்டக் கிளையில் மதிய உணவு இடைவேளையின்போது வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கே.கலையரசு தலைமையில் நடைபெற்றது. செயலாளர் து.சிங்கராயன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். வட்டத் தலைவர் கே.கருணாகரன், முன்னாள் வட்டத் தலைவர் பி.சண்முகம், முன்னாள் மாவட்டச் செயலாளர் எஸ்.செல்லசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினார். மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில துணைப் பொதுச் செயலாளர் வி.இளங்கோ சிறப்புரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் சி.கே.ராமச்சந்திரன் நிறைவுரையாற்றினார். இணைச் செயலாளர் பி.சதீஸ் நன்றி கூறினார். இதில் 20 பெண் ஊழியர்கள் உட்பட 60 ஊழியர்கள் பங்கேற்றனர்.




**விழுப்புரம்**

**சின்னசேலம்** வட்டத்தில் வட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் வி.நாகராஜன் சிறப்புரையாற்றினார். இதில் 60 ஊழியர்கள் பங்கேற்றனர்.

**கள்ளக்குறிச்சி** வட்டத்தில் வட்டச் செயலாளர் வி.ரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் கே.மகாலிங்கம், மாவட்ட பொருளாளர் பி.ரவி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**உளுந்தூர்பேட்டை**யில் வட்டச் செயலாளர் அறிவுடைநம்பி தலைமையில் நடைபெற்ற




ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் கே.மகாலிங்கம் சிறப்புரையாற்றினார்.

**சங்கராபுரத்**தில் வட்டத் தலைவர் இளையராஜா தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இணைச் செயலாளர் எல்.ஆனந்தகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார்.




**திருக்கோயிலூர்** வட்டத்தில் வட்டத் தலைவர் கே.வி.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர் கே.சரவணன் சிறப்புரையாற்றினார்.




**விழுப்புரத்தில்** வட்டத் தலைவர் நாகராஜன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் வி.நாகராஜன், மாவட்ட துணைத் தலைவர் எஸ்.ரத்தினம், மாவட்ட இணைச் செயலாளர் ஜி.ஏ.அசோகன் ஆகியோர் உரையாற்றினர். இதில் 60 ஊழியர்கள் பங்கேற்றனர்.




**செஞ்சி**யில் வட்டத் தலைவர் ஜெ.ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர் ஏ.ஜெ.பார்த்திபன் சிறப்புரையாற்றினார். இதில் 80 ஊழியர்கள் பங்கேற்றனர்.

**திண்டிவனத்**தில் வட்டத் தலைவர் வி.நடராஜன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இணைச் செயலாளர் எம்.சண்முகசுந்தரம் சிறப்புரை யாற்றினார். இதில் 100 ஊழியர்கள் பங்கேற்றனர்.



**வானூரில்** வட்டத் தலைவர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டப் பொருளாளர் சேம்பு சிறப்புரை யாற்றினார்.

**உளுந்தூர்பேட்டை**யிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



மேற்கண்ட ஆர்ப்பாட்டத்தில் தோழமை சங்க நிர்வாகிகள், துறைவாரி சங்க நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

**திருவாரூர்**

குடவாசல் வட்டத்தில் வட்டக் கிளை தலைவர் சி.சுந்தரலிங்கம் தலைமையேற்றார். வட்டச் செயலாளர் வி.தட்சிணாமூர்த்தி வரவேற்றார். மாவட்டத் தலைவர் ஜி.பைரவநாதன், மாவட்ட இணைச் செயலாளர்கள் யு.சண்முகம், சி.பிரகாஷ் மற்றும் துறைச் சங்க நிர்வாகிகள் விளக்கவுரையாற்றினர். சுவாமிநாதன் நன்றி கூறினார்.




**புதுக்கோட்டை**

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வளாகத்தில் மாவட்டத் தலைவர் தலைமையிலும், அனைத்து வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் வட்டத் தலைவர்கள் தலைமையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




**தூத்துக்குடி**

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கிழக்கு வட்டக் கிளையில் ஆர்ப்பாட்டம் வட்ட தலைவர் அண்ணாமலை பரமசிவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட






செயலாளர் ந.வெங்கடேசன் சிறப்புரை யாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தி பேசினர்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மேற்கு வட்டக் கிளை சார்பில் வட்ட தலைவர் வாமணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ந.வெங்கடேசன் சிறப்புரையாற்றினார். வட்டச் செயலாளர் மு.முருகன் நன்றி கூறினார்.

**தென் சென்னை**

தென் சென்னை மாவட்டத்தில் சேப்பாக்கம், டி.எம்.எஸ்., டி.பி.ஐ., அடையாறு, கிண்டி-தாம்பரம், சைதை-நந்தனம் மற்றும் அண்ணாநகர் ஆகிய பகுதி கள் உட்பட 13 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் மாநிலத் தலைவர் இரா.தமிழ்செல்வி, முன்னாள் மாநில துணைத் தலைவர் பி.எஸ்.அப்பர், மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு, மாநிலப் பொருளாளர் மு.தங்கராஜ், மாவட்ட நிர்வாகிகள் சா.டேனியல் ஜெய்சிங், எம்.வெங்கடேசன், பா.புகழேந்தி, நா.வினோத்குமார், ஆர்.என்.நம்பிராஜன், கே.இரகுராமன், உ.சுமதி, இரா.வெற்றிச் செல்வன், தொ.வாசுகி, எம்.சுதா மற்றும்



டி.கோவிந்தராசன் ஆகியோர் பங்கேற்று விளக்கவுரையாற்றினர். இதில் 565 பெண் ஊழியர்கள் உட்பட 1600 பேர் பங்கேற்று சிறப்பித்தனர்.



கோவையில் மாவட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்



திருவள்ளூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

---

**திருச்சிராப்பள்ளி**

மாவட்டத்தில் அனைத்து வட்டக் கிளையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

திருச்சி **வட்டக்கிளை-I**ல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சொக்கலிங்கம் தலைமை தாங்க மாவட்ட நிர்வாகிகள் தோழர்கள் இளங்கோவன், விவேகானந்தன், எலிசபெத் மற்றும் மாநில செயலாளர் பெரியசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**திருச்சி வட்டக் கிளை - II**ல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பழனிச்சாமி தலைமை



தாங்க இணை செயலாளர் குழந்தைவேல் சிறப்புரையாற்றினார்

**லால்குடி** வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தௌலத் தலைமை தாங்க மாவட்ட துணை தலைவர் லட்சுமணன் சிறப்புரையாற்றினார்.

**மண்ணச்சநல்லூர்** வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏகாம்பரம், ஆரோன் பிரபு தலைமை தாங்க மாவட்ட துணைத் தலைவர் கென்னடி சிறப்புரையாற்றினார்.



**துறையூர்** வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கந்தசாமி தலைமை தாங்க மாவட்ட பொருளாளர் பழனியப்பன் சிறப்புரையாற்றினார்.

**மணப்பாறை** வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மருதுபாண்டியன்



தலைமை தாங்க மாவட்ட இணைச் செயலாளர் சுந்தர்ராஜன் சிறப்புரையாற்றினார்.

மாவட்டம் முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு துறையை சார்ந்த நூற்றுக்கணக்கான தோழர்கள் கலந்து கொண்டனர்.

**வடசென்னை**

வடசென்னை மாவட்டத்தில் 5 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 160 பெண் ஊழியர்கள் உட்பட 400 பேர் பங்கேற்றனர். குறளகம் பகுதியில் குறளகத்திலும், எழும்பூர் பகுதியில் ஆவண காப்பகத்திலும், அம்பத்தூர்-ஆவடி பகுதியில் மாநகராட்சி அலுவலகத்திலும், தங்கசாலை பகுதியில் ஸ்டான்லி மருத்துவமனையிலும், மனநல காப்பகத்திலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டங்களில் மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி, மாவட்ட இணைச் செயலாளர் ஜெ.சரஸ்வதி, வி.விஜயகுமரன், விஜயகுமார் மற்றும் மாவட்ட துணைத் தலைவர் பி.பத்மநாபன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். அந்தந்த பகுதிகளில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பகுதிக் குழு நிர்வாகிகள் பங்கேற்றனர். ❖

**இரத்த தானம் செய்வோம்! உயிர்களைக் காப்போம்!!**

அரசு ஊழியர் இதழுக்கு அனுப்பும் தகவல்களை நிகழ்ச்சி முடிந்தவுடன் உடனுக்குடன் அரசு ஊழியர் மெயிலில் அனுப்பி வைக்கவும். இதழில் பிரசுரிப்பதற்கான கவிதை, கட்டுரை மற்றும் இதர நிகழ்வுகளை ஒவ்வொரு மாதமும் 25ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- **ஆசிரியர் குழு**

# அரசு ஊழியர் சங்க மாவட்ட மாநாடுகள்

**திருவள்ளூர்**






தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட 8வது மாநாடு திருவள்ளூரில் நடைபெற்றது. 2016 டிசம்பர் 3 அன்று மகளிர் மாநாடு நடைபெற்றது. இதற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் கோ.இளங்கோவன் தலைமை தாங்கினார். மகளிர் துணை குழு அமைப்பாளர் க.திவ்யா வேலை அறிக்கையை வாசித்தார். இதில் அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஜா.வே.அருள்டேனியேல், தமிழ்நாடு மேல்நிலை பட்டதாரி தலைமை ஆசிரியர்கள் கழக மாவட்ட செயலாளர் எஸ்.ஞானசேகர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநில பொருளாளர் பி.சுந்தராம்பாள், வட்டாச்சியர் விஜயலட்சுமி, பிடிஓ சுதா, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் பிரசன்னா, அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் ஆர்.ஜெயராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். இதில் மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி பங்கேற்று சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில தலைவர் இரா.தமிழ்செல்வி நிறைவுரையாற்றினார். இந்நிகழ்வில் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவராக இருந்து பணி ஓய்வு பெற்ற கோ.தெய்வசிகாமணி அவர்களின் பணியை பாராட்டினர். மாவட்ட நிர்வாகி மகேஸ்வரி நன்றி கூறினார். மாநாட்டில் 150 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் நடைபெற்ற புதிய நிர்வாகிகள் தேர்வில் மாவட்டத் தலைவராக கோ.இளங்கோவன், மாவட்டச் செயலாளராக ஜா.வே.அருள்டேனியேல், பொருளாளராக எஸ்.காந்திமதிநாதன், மாவட்ட துணை தலைவர்களாக ஜி.மில்கிராஜாசிங், எம்.பாண்டியராஜன், எம்.சத்தியநாதன், க.திவ்யா, மாவட்ட இணைச் செயலாளர்களாக சீனிவாசன், எம்.சந்திரமோகன், சி.சக்ரவர்த்தி, மணிகண்டன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மகளிர் துணை குழு அமைப்பாளராக க.திவ்யா தேர்வு செய்யப்பட்டார்.

இம்மாநாட்டில் திருவள்ளூர் மாவட்டத்தில் மர்ம காய்ச்சலால் உயிர் பலி ஏற்படுகிறது இதனை தவிர்க்க மாவட்ட, வட்டார மருத்துவமனைகளில் உள்ள காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும், தமிழக அரசு 110-விதியின் கீழ் புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்யப்படும் என அறிவித்துள்ளது அதற்கான அரசாணையை வெளியிட வேண்டும், மாவட்டத்தில்

சத்துணவு திட்டத்தில் 2000-மேற்பட்ட காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும், திருவள்ளூர் நகருக்குள் செல்ல முடியாத அளவில் அனுதினமும் போக்குவரத்து நெரிசல் உள்ளதால் புறவழிச்சாலை அமைக்கப்பட வேண்டும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் இரவு 10 மணி வரை நடத்துவதை நிறுத்த வேண்டும், சாலைகளை சீரமைக்க வேண்டும், புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும், திருவள்ளூர் நகராட்சியில் 8 ஆண்டுகளாக முடிக்கப் படாமல் உள்ளதை விரைந்து முடிக்க வேண்டும், மகளிர் சிறப்பு பேருந்து இயக்க வேண்டும், அங்கன்வாடி, சத்துணவு ஊழியர், ஊராட்சி செயலர் ஆகியோருக்கு காலமுறை ஊதியமாக மாற்றி அமைக்க வேண்டும், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் குழந்தைகள் காப்பகம் அமைக்க வேண்டும், அரசு அலுவலகங்களில் தொடரும் பாலியல் சீண்டலை தடுக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### புதுக்கோட்டை

புதுக்கோட்டையில் 17.12.2016 ஞாயிறு அன்று நடைபெற்ற மாநாட்டிற்கு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் கே.நாகராஜன் தலைமை வகித்தார். வி.பத்மினி வரவேற்றார். மாவட்டச் செயலாளர் ஆர்.ரெங்கசாமி, துணைத் தலைவர் சி.கோவிந்தசாமி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். கவிஞர் நா.முத்துநிலவன் கருத்துரை வழங்கினார்.

புதிய அமைப்புக் குழுவை அறிமுகப் படுத்தி மாநில மகளிர் துணைக் குழு அமைப்பாளர் ஆர்.பாண்டியம்மாள் சிறப்புரை யாற்றினார். மாவட்ட அமைப்பாளராக வி.பத்மினி, துணை அமைப்பாளராக பி.வித்யா உள்ளிட்ட 11 பேர் கொண்ட அமைப்புக்குழு தேர்வு செய்யப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்ட அளவில் பல்வேறு நிகழ்ச்சிகள் புதுகை நகர்மன்ற கட்டிடத்திலேயே நடைபெறுகிறது. ஆனால், இங்கு ஒரு நிரந்தரக் கழிப்பறை வசதி இல்லாததால் பெண்களும், பொதுமக்களும் இயற்கை உபாதையை கழிப்பதற்கு மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, நகர்மன்ற கட்டிட வளாகத்தில் நிரந்தர கழிப்பறை வசதி ஏற்படுத்தித் தரவேண்டும்.

காலையிலும் மாலையிலும் அரசு அலுவலர்களும் பொதுமக்களும் செல்வதற்கு வசதியாக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். அரசு அலுவலகங்களில் பெண் அரசு ஊழியர்கள் கைக்குழந்தைகளை பராமரிப்பதற்கு தனியாக அறை ஒதுக்கித் தர வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### திருவாரூர்

12வது மாவட்ட மாநாடு 2016 டிசம்பர் 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் ஐஸ்வர்யா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. 16.12.2016 அன்று நடைபெற்ற மாவட்ட மகளிர் மாநாட்டில் தமிழகத்தில் பெண் அரசு ஊழியர்கள் மீது நடத்தப்படும் பாலியல் சீண்டல்கள், துன்புறுத்தல்கள் மீது கடுமையான சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளராக டி.சுவலெட்சுமி தேர்வு செய்யப்பட்டார். 12 பேரைக் கொண்ட மகளிர் துணைக் குழுவும் அமைக்கப்பட்டது.

17.12.2016 அன்று நடைபெற்ற பிரதிநிதிகள் மற்றும் பொது மாநாட்டில் பெரும்பான்மை யான உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு தமிழ்நாடு அரசு அங்கீகாரம் வழங்க வேண்டும், திருவாரூரில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு கிரேடு 2 நிலை வீட்டு வாடகைப் படியை வழங்க வேண்டும், காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைக்க





வேண்டும், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், எட்டாவது ஊதியக் குழுவை உடனடியாக அமைக்க வேண்டும் உள்ளிட்ட 26 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர் ஜி.பைரவநாதன் தலைமையேற்றார். மாவட்ட துணைத் தலைவர் சி.ராகுலன் வரவேற்றார். எம்.ராஜமாணிக்கம் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்டச் செயலாளர் எம்.சௌந்தரராசன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாவட்ட பொருளார் வெ.சோமசுந்தரம் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தார். மாநில துணைத் தலைவர் பி.எஸ்.அப்பர் மாநாட்டை துவக்கி வைத்தார். முன்னாள் மாநில துணைத் தலைவர் கே.அகோரம், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்டச் செயலாளர் ஜி.வீரமணி ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் நிறைவுரையாற்றினார்.

பின்னர் நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகள் தேர்வில் மாவட்டத் தலைவராக ஜி.பைரவநாதன், மாவட்டச் செயலாளராக எம்.சௌந்தரராசன், மாவட்டப் பொருளாள ராக வி.சோமசுந்தரம், மாவட்ட துணைத் தலைவர்களாக எஸ்.புஷ்பநாதன், எஸ்.தமிழ்செல்வன், ஆர்.ராஜசேகரன், வி.சின்னையன், மாவட்ட இணைச் செயலாளர்களாக உ.சண்முகம், ஏ.தனபால், சி.பிரகாஷ், எம்.மூர்த்தி ஆகியோரும், மாவட்ட தணிக்கையாளர்களாக எம்.நடராசன், வெ.வசந்தன் ஆகியோரும் தேர்வு செய்யப் பட்டனர். மாநில செயற்குழு உறுப்பினர் டி.மணிவண்ணன் நன்றி கூறினார்.

**தஞ்சாவூர்**

சங்கத்தின் மாவட்ட மாநாடு 02.12.2016 மற்றும் 03.12.2016 ஆகிய தேதிகளில் மாவட்டத் தலைவர் எஸ்.கோவிந்தராசு தலைமையில் நடைபெற்றது. 02.12.2016 அன்று மாலை மகளிர் மாநாடு நடைபெற்றது. இதில் தமுஎகச மாநில துணைத் தலைவரும், சிறுகதை எழுத்தாளருமான ஆர்.நீலா பங்கேற்று சிறப்புரையாற்றினார். மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர்களாக 13 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

03.12.2016 அன்று காலை மாநாடு கொடியேற்ற நிகழ்ச்சியுடன் துவங்கப்பட்டது. அரசு ஊழியர் சங்கக் கொடியினை மாவட்டத் தலைவர் எஸ்.கோவிந்தராசு மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியை மாநில துணைத் தலைவர் கே.எம்.தியாகராஜன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். மாவட்ட துணைத் தலைவர் வீ.கோவிந்தராஜ் வரவேற்றார். மாவட்ட இணைச் செயலாளர் ஏ.விஸ்வேஸ்வரன் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார்.

மாநிலச் செயலாளர் மு.அன்பரசு மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஆ.ரெங்கசாமி வேலை அறிக்கையினையும், மாவட்ட பொருளாளர் சா.கோதண்டபாணி நிதிநிலை அறிக்கையினையும் தாக்கல் செய்தனர். மாவட்ட நிர்வாகிகள் கை.கோவிந்தராஜ், ப.கோதண்டபாணி,

ச.செல்வி, தி.ரவிச்சந்திரன், மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் மற்றும் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் மாவட்டத் தலைவராக எஸ்.கோவிந்தராசு, துணைத் தலைவர்களாக கை.கோவிந்தராஜ், சிவ.ரவிச்சந்திரன், எம்.என்.சாந்தாராமன், எஸ்.தமிழ்வாணன், செயலாளராக ஆ.ரெங்கசாமி, இணைச் செயலாளர்களாக அ.விஸ்வேஸ்வரன், ச.செல்வி, ப.கோதண்ட பாணி, தி.ரவிச்சந்திரன், பொருளாளராக சா.கோதண்டபாணி, தணிக்கையாளர்களாக எஸ்.ஹேமலதா, எம்.ராஜன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநில மாநாட்டு பிரதிநிதி களாக 20 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்ட மாநாட்டினை வாழ்த்தி அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.தமிழ்மணி, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில பொதுக் குழு உறுப்பினர் எஸ்.முருகன் ஆகியோர் பேசினர்.

இம்மாவட்டத்திலிருந்து பணி மாறுதலில் சென்ற மாவட்ட துணைத் தலைவர் வீ.கோவிந்தராஜுக்கு நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் புதிய மாவட்ட நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றினார். மாநில துணைத் தலைவர் கே.எம்.தியாகராஜன் நிறைவுரை யாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் சிவ.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

### வேலூர்

9.12.2016 மற்றும் 10.12.2016 ஆகிய தேதிகளில் மாவட்ட மாநாடு மிகவும் எழுச்சியோடு நடைபெற்றது. 9.12.2016 அன்று மாலை மகளிர் மாநாடு மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் கே.ஆண்டாள் தலைமையில் துவங்கியது. முன்னதாக முன்னாள் மாவட்ட மகளிர் அமைப்பாளர் ஏ.வாசுகி வரவேற்றார். அக்சீலியம் மகளிர்






கல்லூரியின் பேராசிரியர் முனைவர் சே.அமுதா கருத்துரையாற்றினார். ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் திருமதி. இந்திரா பிரியதர்ஷினி சிறப்புரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் க.சரவணராஜ் வாழ்த்தி பேசினார். நிறைவாக மகளிர் துணைக் குழு வேலூர் மாவட்ட உறுப்பினர் கவிதா நன்றி கூறினார். பல்வேறு துறைகளிலிருந்து 100க்கும் மேற்பட்ட பெண் ஊழியர்கள் இதில் பங்கேற்றனர்.

இரண்டாம் நாள் நிகழ்வாக மாவட்ட மாநாடு மாவட்டத் தலைவர் க.சரவணராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் செ.வெங்கிடாசலம் வரவேற்றார். மாவட்ட துணைத் தலைவர் கே.ஆண்டாள் அஞ்சலி தீர்மானம் வாசித்தார்.

அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.கிருஷ்ணமூர்த்தி மாநாட்டை துவக்கி வைத்தார். வேலை அறிக்கையை செயலாளர் ப.இராஜாமணியும், நிதிநிலை அறிக்கையை பொருளாளர் கோ.மோகனமூர்த்தியும் சமர்ப்பித்தனர். மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஏ.இராஜசேகரன், எஸ்.ஜோசப்கென்னடி, கே.ஆண்டாள், நா.கணபதிராஜா, வி.விஜயபதி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் மாவட்டத் தலைவராக க.சரவணராஜ்,

துணைத் தலைவர்களாக எஸ்.ஜோசப் கென்னடி, செ.வெங்கிடாசலம், எஸ்.ஏ.இராஜசேகரன், கே.ஆண்டாள், மாவட்டச் செயலாளராக ப.இராஜாமணி, இணைச் செயலாளர்களாக எஸ்.செந்தில் குமார், வி.விஜயபதி, எம்.ஜெயசீலன், ப.இரமேஷ், மாவட்ட பொருளாளராக கோ.மோகனமூர்த்தி ஆகியோரும், மாவட்ட தணிக்கையாளர்களாக ஜெ.பிரபு, இரமேஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், மாநில மாநாட்டு பிரதிநிதிகளாக 21 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்ட மாநாட்டை கருவூல கணக்குத் துறை அலுவலர் சங்க முன்னாள் மாநில பொதுச் செயலாளர் மு.சிலுப்பன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க முன்னாள் மாநில பொதுச் செயலாளர் ந.சேகரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

முன்னாள் நிர்வாகிகள் குப்புசாமி, நா.கணபதிராஜா ஆகியோரின் பணி நிறைவையொட்டி நடைபெற்ற பாராட்டு விழாவில் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. நிறைவாக புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து மாநில துணைத் தலைவர் சு.பார்த்திபன் உரையாற்றினார். எஸ்.செந்தில் குமார் நன்றி கூறினார்.

**திருச்சிராப்பள்ளி**

11வது மாவட்ட மாநாடு திருச்சிராப்பள்ளியில் 24.12.2016 அன்று மாவட்டத் தலைவர் எம்.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடி ஏற்றத்துடன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் கே.எம். தியாகராஜன் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார்.

மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்பாபு வேலை அறிக்கையையும், மாவட்ட பொருளாளர் ஜி.லட்சுமணன் பொருளாளர் அறிக்கையையும் சமர்ப்பித்தார்கள். மாவட்ட பிரதிநிதித்துவ







பேரவை உறுப்பினர்களின் பல்வேறு விவாதத்தின் இறுதியில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட செயலாளர் எம்.வி.செந்தமிழ்ச் செல்வன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் மாவட்ட செயலாளர் மொ.சிராஜுதீன், தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி தலைவர் சி.ஆரோக்கியராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநில நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகள் தேர்தலில் மாவட்ட தலைவராக தி.இளங்கோவன், மாவட்ட துணைத் தலைவர்களாக ஏ.பெரியசாமி, ஜி.லட்சுமணன், எம்.கென்னடி, ஏ. மாணிக்கம் ஆகியோரும், மாவட்ட செயலாளராக ஏ.ராஜ்பாபு, மாவட்ட இணைச் செயலாளர்களாக எம்.பி.விவேகானந்தன், ஜெ.எலிசபெத்ராணி, ஆர்.சுந்தர்ராஜன், குழந்தைவேல் ஆகியோரும், மாவட்ட தணிக்கையாளர்களாக பி.மருதுபாண்டியன், ஜெ.கேசவமூர்த்தி ஆகியோரும் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

*மாநில செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் நிறைவுரையாற்ற பல்வேறு துறையை சார்ந்த மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தின் இறுதியில் மாவட்ட துணைத் தலைவர் ஜி.கல்யாணராமன் நன்றி கூறினார்.*

**விழுப்புரம்**

*12வது மாவட்ட மாநாடு 23.12.2016 மற்றும் 24.12.2016 ஆகிய தேதிகளில் விழுப்புரத்தில் எம்.கே.மண்டபத்தில் மாவட்டத் தலைவர் கே.சரவணன் தலைமையில் நடைபெற்றது. முதல் நாள் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை மாவட்ட துணைச் செயலாளர் எம்.சண்முக சுந்தரம் வரவேற்றார். முன்னதாக அரசு ஊழியர் சங்கக் கொடியினை மாவட்டத் தலைவர் கே.சரவணன் மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் கொடி யினை மாநில துணைத் தலைவர் சு.பார்த்திபன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். மாநாட்டை சு.பார்த்திபன் துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் வி.நாகராஜன் வேலை அறிக்கையினையும், மாவட்ட பொருளாளர் கே.மகாலிங்கம் நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்தனர்.*

*மாநாட்டினை வாழ்த்தி அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவர் கே.தங்கராசு, எல்ஐசி ஊழியர் சங்க கோட்டக் கிளை செயலாளர் கே.வேலாயுதம் ஆகியோர் பேசினர். மாவட்ட நிர்வாகிகள் சந்திரசேகரன், பி.ரவி, பி.முத்து, முன்னாள் மாவட்டச் செயலாளர் இளங்கோபிரபு, மாவட்ட தணிக்கையாளர் ஏ.ஜெ.பார்த்திபன், மாநில செயற்குழு உறுப்பினர் ஜி.அன்பழகன் ஆகியோர் பேசினர்.*

*இரண்டாம் நாள் நிகழ்ச்சியான 24.12.2016 அன்று நடைபெற்ற மகளிர் கருத்தரங்கம் மாவட்டத் தலைவர் கே.சரவணன் தலைமையில் நடைபெற்றது. இதில் சாவித்திரி, அய்யாயிரம், விஜயா உள்ளிட்டோர் கருத்துரையாற்றினர். மாநிலத் தலைவர் இரா.தமிழ்செல்வி சிறப்புரையாற்றினார். 16*





*பேர் கொண்ட மாவட்ட மகளிர் துணைக் குழு அமைக்கப்பட்டது.*

*பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் மாவட்டத் தலைவராக வி.நாகராஜன், துணைத் தலைவர்களாக கே.சரவணன், ஏ.ஜெ.பார்த்திபன், எஸ்.ரத்தினம், ஏ.டி.செல்வம், மாவட்டச் செயலாளராக கே.மகாலிங்கம், இணைச் செயலாளர்களாக ஜி.ஏ.அசோகன், எம்.சண்முகசுந்தரம், எல்.ஆனந்தகிருஷ்ணன், எஸ்.தேசிங்கு, மாவட்டப் பொருளாளராக பி.ரவி மற்றும் மாவட்ட தணிக்கையாளராக கே.சரவணன் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப் பட்டனர்.*

*பின்னர் நடைபெற்ற பொது மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர் கே.நாகராஜன் தலைமை யேற்றார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர் கே.மகாலிங்கம் உரையாற்றினார். மாநாட்டை வாழ்த்தி ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் ஏ.பக்கிரிசாமி, போக்குவரத்துத் துறை ஊழியர் சங்கத்திதன் எஸ்.மூர்த்தி உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர். நிறைவாக மாநிலச் செயலாளர் எஸ்.தமிழ்ச்செல்வி உரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் எஸ்.ரத்தினம் நன்றி கூறினார்.*

❖

# காத்துக் கிடக்கின்றனர்!!

நாகை ஏ...ட்டீ...ஏ

**த**மிழ்நாட்டு அரசியலில் சத்துணவுத் திட்டத்திற்கு மகத்தான இடமுண்டு. பட்டினியைப் போக்க வயல் வேலைக்குச் சென்றதனால், பள்ளி வாசலை மிதிக்காமல் இளம் வயதிலேயே கல்விக் குருடர்களாய் குழந்தைகள் மாறியதை கண்டு மனம் வெதும்பி, அவர்கள் கல்விக் கண்ணை திறப்பதற்காக பெருந்தலைவர் காமராசர் மதிய உணவு திட்டத்தை கொண்டுவந்தார். அதற்காக நிதி இல்லையே என்று அன்றைய கல்வியாளர் நெ.து.சுந்தரவடிவேல் போன்றோர் கூறியபோது. மாணவர்களின் அறிவுப் பசியை போக்கிட தெருவில் இறங்கி பிச்சை எடுக்க வும் நான் தயார் என அன்றைய முதல்வர் காமராஜர் கூறினாராம். பின்னர் ஆட்சிக்கு வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ராமச்சந்திரன் பசி பட்டினி பற்றி அறிந்திருந்ததால், தானே அதனை உணர்ந்திருந்ததால், பள்ளிக்கு வரும் குழந்தைகள் ஒரு வேளையாவது வயிறார சாப்பிட வேண்டும் என்பதால் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் "சத்துணவுத் திட்டம்". அது இன்று வரை பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகின்றது. இப்பொழுது முதலமைச்சர் சத்துணவு திட்டம் என அழைக்கப்படுகின்றது. எம்.ஜி.ஆர் அவர்களால் துவங்கப்பட்ட திட்டம் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னரும் தவிர்க்கவே இயலாத திட்டமாக இத்திட்டம் தொடர்ந்து வருகின்றது.

முதலில் பசி போக்க மட்டும் வழங்கப் பட்ட உணவு காலப்போக்கில், இத்திட்டத் தால் கிடைக்கப் பெற்ற அரசியல் லாபத்தை முன்னிட்டும், குழந்தைகள் சத்தான உணவு சாப்பிடுவதன் மூலம் அவர்களின் எதிர்காலம் பயனுள்ளதாக மாறும் என்ற நல்லெண் ணத்தாலும் இன்று வாரத்தில் அய்ந்து நாட்கள் முட்டை, மாதம் இரண்டு முறை கொண்டக் கடலை / பயிறு என பலவித மாற்றங்களைப் பெற்று நடந்து வருகின்றது. ஆரம்பத்தில் தனியாரின் நன்கொடைகள் பங்கேற்போடு நடந்த இத்திட்டம், இன்று அரசின் முழு திட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நடந்து வருகின்றது. இத்திட்டத்தில் 1 முதல் 5 வரை உள்ள வகுப்பு குழந்தைகளுக்கு 100 கிராம் அரிசியும் 6 முதல் 10 வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு 150 கிராம் அரிசியும், மாணவர் ஒவ்வொருவருக்கும் 41 பைசா மளிகை பொருட்களுக்கும், 48 பைசா எரிபொருளுக்கும் என்பது உட்பட பல்வேறு செலவினங்களுக்கு மான்யங்கள் அரசால் வழங்கப்படுகின்றன.

மதிய உணவுத் திட்டம் சத்துணவு திட்டமாக மாற்றம் செய்யப்பட்ட பொழுது, இத்திட்டத்தை அமல்படுத்திட சத்துணவு ஊழியர்கள் "குறளமுது ஆசிரியர்கள்" என்ற பெயரிலும், சமையலர், உதவியாளர் என்ற பெயரிலும் நியமிக்கப்பட்டனர். குறளமுது ஆசிரியர்கள் பின்னர் அமைப்பாளர்களாக மாறினர். அரசால் கொண்டு வரப்படும் திட்டம், அதுவும் ஆசிரியர் என்ற பெயரெல்லாம் இருந்தவுடன் பின்னர் வேறு முழு நேரப் பணிக்கு நம்மை மாற்றி விடுவார்கள் என்ற எண்ணமுடன் பத்தாம் வகுப்புதான் அப்பணிக்கான தகுதி என வரையறுக்கப்பட்டிருந்த பொழுதிலும், அன்று பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு உட்பட பல தகுதியுடையோர் பணியை பெற்றனர். பகுதி நேரப் பணி என நியமிக்கப்பட்டு மிகக் குறைந்த ஊதியம் மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலையில் அத்திட்டத்தில் பணிபுரிந்து வரும் ஊழியர்கள் சங்கமாக ஒருங்கிணைந்து போராட்டம், பேச்சுவார்த்தை என்ற அடிப்படையில் இன்று சிறப்பு காலமுறை ஊதியம் என்ற பெயரில் ஓர் ஊதியத்தை பெற்று வருகின்றனர். ஊரார் வீட்டு



குழந்தைகளுக்கு அன்னமிடும் பணியில் உள்ள இச் சத்துணவு ஊழியர்கள் வீட்டு குழந்தைகளை வளர்க்க இவர்கள் படும் துயரம் சொல்லில் அடங்காது. பகுதி நேரப் பணி என்ற பொழுதும், காலையில் கடைத்தெரு சென்று காய்கறி, மளிகை, எண்ணை வாங்க ஆரம்பித்து, பள்ளிக்குச் சென்று சமையலுக்கான ஆயத்தப் பணிகளை தயாரித்து, சமையல் நடைபெறுவதை கண்காணித்து, பின்னர் குழந்தைகளுக்கு உணவு வழங்கி, வழங்கப்பட்ட உணவை உண்டதால் குழந்தைகளுக்கு ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அதற்கு தீர்வு காண ஆவன செய்து முடிக்கும் வரை, வேறு எதனைப் பற்றியும் நினைக்க நேரமிருக்காது. இதில் இப்பணி முடித்த பின்னர் வேறு பணிக்கு எங்கு செல்வது? வேறு பணிக்கும் செல்லாமல், புகையோடு வாழ்வை 33 ஆண்டுகளுக்கும் மேலாக தொலைத்து விட்டு பணி நிறைவைப் பெறும் சத்துணவு ஊழியர்களுக்கு வேலை செய்யும் பொழுதும் முறையான ஊதியம் வழங்கப்படுவதில்லை என்பது சோகமென்றால், ஓய்வுக்குப் பின்னர் குறைந்தபட்ச ஓய்வூதியம் அரசின் வழிகாட்டு தல்படி வழங்கப்படுவதில்லை என்பது அதனினும் சோகமாகும். பணியின் பொழுது சாதாரண அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுப்புகள் அனைத்தும் வழங்கப்படுவதில்லை என்பது அநீதியென்றால், உடல் சுகவீனமாகிய நிலையில் வழங்கப்படும் மருத்துவ விடுப்பும் இல்லையென்பது அதனினும் அநீதியாகும்.

சத்துணவுக் கூடங்களையும் சமைத்த உணவு பறிமாறப்படும் இடத்தையும் பல பள்ளிகளில் சென்று பார்வையிட்டால் வேதனையே மிஞ்சும். சமையல் நடைபெறும் இடத்தில் தேவையான வெளிச்சம் இருக்காது, காற்றோட்ட வசதி இருக்காது, உணவுப் பொருள் பாதுகாப்பு அறை என்ற ஒன்று தனியே இருக்காது, உணவு பரிமாறுமிடமோ மரத்தடியாகவோ அல்லது பள்ளியின் வராண்டாவாகவோ இருக்கும். கை கழுவ மற்றும் குடிநீருக்கான தண்ணீர் வசதி குறித்து கேட்கவே தேவையில்லை. ஆனால் இத் திட்ட செயல்பாட்டை மற்றும் பணிபுரியும் ஊழியர்களை ஆய்வு செய்திட மட்டும் மக்கள் பிரதிநிதிகள் முதல் அரசின் பல்வேறு துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் வரை தினமும் வந்தவண்ணம் இருப்பர்.

சமீபத்தில் ஒரு கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளிக்கு செல்ல வேண்டியிருந்தது. அந்தப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 6. ஆனால் அப்பள்ளியில் பயிலும் மொத்த மாணவர் எண்ணிக்கையோ 26. சத்துணவு திட்டம், அனைவருக்கும் கல்வித் திட்டம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் ஊரில் இவ்வளவு குறைவான எண்ணிக்கையில் மாணவர்கள் உள்ளனரே என்ற ஆச்சர்யத்துடன் அங்கிருந்த ஆசிரியரிடம் வினவிய பொழுது, இக்கிராமத்தில், சுற்று வட்டாரத்தில் உள்ள குழந்தைகளெல்லாம் பக்கத்தில் உள்ள ஊரில் ஆங்கிலக் கல்வி கற்க சென்று விடுகின்றனர், எனவே இங்கே மாணவர் வருவதில்லை என தெரிவித்தார். காமராஜர், எம்.ஜி.ஆர் காலம் தொட்டு அரசுப் பள்ளியில் சேர்ந்து பயிலும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வந்த நிலையில் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் அனைவருக்கும் கல்வித் திட்டம் அமல்படுத்தப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டும் அரசுப் பள்ளிகளில் கற்போர் எண்ணிக்கை குறைவது குறித்து அரசு தீவிரமாக ஆலோசிக்க வேண்டும். அனைவரும் பணம் கட்டி தங்கள் குழந்தைகளை ஆங்கிலக் கல்வி பெற வைக்கு



மளவிற்கு வசதி வாய்ப்பு பெற்று விட வில்லை. ஆனால் தன் அன்றாட செலவுகளை குறைத்துக் கொண்டு தன் பிள்ளைக்கு நல்ல தரமான கல்வி கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கியுள்ளதே உண்மை. ஆக தரமான கல்வியென்பது தனியாரால்தான் சாத்தியம் என்ற எண்ணத்தை மாற்ற அரசும், அரசுப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் வழியே கொண்டுவர முழுமையான முயற்சி எடுக்க வேண்டும். இலவச சத்துணவு, இலவச சீருடை, இலவச கல்வி உபகரணங்கள் மட்டும் வெற்றிகரமான கல்வியை தேடித் தராது என்பதை அரசு உணர வேண்டும். தனியார் மருத்துவமனையோ, தனியார் கல்வியோ இல்லை என்பதை முடிவாகக் கோண்டு வெற்றிகரமான ஆட்சியை உலகில் நிருபித்துக் காட்டி தன் தேசம் யாருக்கும் அடிமை யாகாமல் காத்து கியூபாவை தலை நிமிரச் செய்த பிடல் காஸ்ட்ரோ சமீபத்தில் மறைந் துள்ள நிலையில், தரமான கல்வியறிவை அரசு வழங்கினால் மட்டுமே எதிர்கால இந்தியா வளமாக வாய்ப்பு உண்டு என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும்.

முன்மாதிரியான முதலாளியாக அரசாங்கம் செயல்பட வேண்டுமென்ற அடிப்படையில் சத்துணவு திட்டத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியக் குழுவில் வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென தொடர்ந்து கோரிக்கை வைத்து போராடிவரும் சத்துணவு ஊழியர்களின் எண்ணம் ஈடேருமா ? “புரட்சித் தலைவர் ஆட்சி மலரும், சத்துணவு ஊழியர் களின் கோரிக்கைகள் நிறைவேறும்” என வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களும், இரண்டாம் முறை ஆட்சிக்கு வந்து முதல்வராகவே மறைந்தும் விட்டார். அவர் அளித்த வாக்குறுதி அவரின் வாரிசு களால் நிறைவேற்றப்படும் என எதிர்பார்த்து சத்துணவு ஊழியர்களும் அவர்களைப் போல நீண்ட காலமாய் பணி செய்துவரும் பெண் களை மட்டுமே உள்ளடக்கிய ஊட்டச்சத்து திட்ட ஊழியர்களும், தரமான இலவசக் கல்வி கிடைக்குமா என எதிர்பார்த்து தமிழகத்தின் மாணவர்களும் காத்துக் கிடக்கின்றனர்.

❖

# பனிக்கால நோய்களும் தடுக்கும் வழிகளும்

டாக்டர் எஸ்.காமராஜ், பி.எஸ்.எம்.எஸ்.,
திருச்சி

**கா**ர்த்திகை மாதம் முடியும் நிலையில் மார்கழி மாத பனிமழை பெய்யத் தொடங்கிவிட்டது. மார்கழி, தை மாதங்களில் தரையெல்லாம் குளிருமே. இன்னும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை மார்கழி குளிரில் நடுங்குவது, ஒடுங்குவது தெரிகிறது. இயற்கையின் மாற்றங்களுக்கும், சீற்றங்களுக்கும் ஏற்ப நம்மை நாம் தயார் படுத்திக் கொண்டு பாதுகாப்பாக இருக்க வேண்டாமா? பனிக்கால நோய்களான தும்மல், மூக்கடைப்பு, விஷக்காய்ச்சல், குளிர், மூச்சுத்திணறலை தடுக்க வேண்டாமா? குணப்படுத்த வேண்டாமா?

நிச்சயம் வேண்டும். பனிக்கால நோய்கள் வராமல் தடுக்க, வந்த நோய்களை தீர்க்க கீழ்வரும் வழிமுறைகளை கடைபிடித்து, கை வைத்திய முறைகளை நம் வீட்டிலேயே செய்து கொண்டால் பனியால் வரும் பிணிகளையும், இயற்கையின் தட்ப, வெப்ப மாறுபாடுகளையும் எளிதாக வெல்ல முடியும். தடுக்க முடியும். இயற்கையோடு இணைந்து வாழ முடியும்.

### பனியைத் தடுப்போம்! பிணியைத் தீர்ப்போம்!

1. பனிக்கால பின் இரவு நேரங்களில் நீண்டநேரம் வெளியில் இருப்பதை, இரு சக்கர வாகனத்தில் சுற்றுவதை, கடைவீதியில் சுற்றுவதை தவிர்க்க வேண்டும்.

2. சூரிய அஸ்தமன நேரத்திலேயே வீட்டின் ஜன்னல், கதவுகளை மூட வேண்டும். ஜன்னலின் திரைச்சீலைகளை பயன்படுத்தி பனி வீட்டின் உள்ளே வராமல் தடுக்க வேண்டும்.



3. இரவு நேரங்களில் தூங்கும் அறைகளில் தூங்கும் நேரத்தில் குளிர் சாதன வசதியை தவிர்க்க வேண்டும்.

4. காலை எழுந்தவுடன் குளிர்ந்த நீரில் குளிப்பதை தவிர்த்து இளவெண்ணீரில் குளிக்க வேண்டும். சிறு குழந்தைகள், நோய்வாய்ப் பட்டவர்கள், முதியவர்கள் மட்டும். பருவ வயது ஆண்கள், பெண்களுக்கு இது பொருந்தாது.

5. குடிப்பதற்கு காய்ச்சி, வடிகட்டி ஆற வைத்த தண்ணீரை குடிக்க வேண்டும்.

6. குளிர்பானங்கள், குளிர்ந்த நீர், ஐஸ்கிரீம் போன்றவைகளை தவிர்க்க வேண்டும்.

7. மேலாடைகள் உடலை முழுவதும் மூடி இருக்கும்படி அணிந்து கொள்ள வேண்டும்.

8. இரவு நேரங்களில், அதிகாலை நேரங்களில் ஸ்வெட்டர், மப்ளர், ஸ்கார்ப், கம்பளி ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும்.

9. பேருந்து, ரயில், கார்களில் பயணம் செய்யும்பொழுது ஜன்னல் ஓரங்களில் அமர்வதை தவிர்க்க வேண்டும்.

10. இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் கார்களில் குளிர்சாதன வசதியை தவிர்க்க வேண்டும்.

11. உடலுக்கும், தலைக்கும் எண்ணெய் தேய்த்து குளிப்பதை தவிர்க்க வேண்டும்.

12. எளிதில் ஜீரணிக்கக்கூடிய சைவ உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். மீன், நண்டு, நாட்டு முட்டை, கருவாடு போன்றவற்றை இக்காலத்தில் தவிர்ப்பது நல்லது.

13. உண்ட உணவு செரித்த பின் அடுத்த வேளை உணவை உண்ண வேண்டும்.

*14.* எண்ணெய் பலகாரங்கள், அசைவ உணவுகள், கேக், குளிர்பானங்களை தவிர்க்க வேண்டும்.

*15.* சூரிய உதயத்திற்கு பிறகு நடைப் பயிற்சி, உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி செய்ய வேண்டும்.

**பனிக்கால நோய்களுக்கு மருந்து**

பனிக்காலங்களில் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க, பனிக்கால நோய்கள் பரவாமல் தடுக்க, உடல் சுறுசுறுப்பாக இயங்க காலை, மாலை சுக்கு மல்லி காபி அல்லது ஆவாரம்பூ காபி அல்லது சுக்கு, சீரகம், சோம்பு, ரோஜா இதழ், செம்பருத்திப் பூ, ஏலம் நன்னாரி சேர்ந்த காபி அல்லது நிலவேம்பு குடிநீர் அல்லது வில்வவேர், முன்னைவேர், பெருவாகைவேர், குமிழ்வேர், பாதிரிவேர், மூவிலைவேர், ஓரிலைவேர், முள்ளுக் கத்திவேர், நிலவேம்பு, துளசி, ஓமவள்ளி, ஆடாதோடை, செம்பருத்தி, தூதுவளை, நஞ்சறுப்பான் சேர்ந்த அக்கிரகாரவேர், முள்ளிவேர், கடுக்காய்தோல், ஆடாதோடை இலை, கற்பூரவள்ளி இலை, கோஷ்டம், நீந்தில் தண்டு, சிறுதேக்கு, நிலவேம்பு, வட்ட திருப்பிவேர், கோரைக்கிழங்கு சேர்ந்த கபசர குடிநீர் இவைகள் பொதுவாக மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

**தும்மல்**

குளிர்ந்த காற்றை சுவாசிப்பதாலும், குளிர்ந்த காற்று, தூசி, மனதுக்கு ஒவ்வாத வாடையினாலும் மலக்கட்டு இருந்தாலும் ஒத்துக் கொள்ளாத உணவினாலும் தும்மல் ஏற்படலாம்.

**மூக்கடைப்பு**

குளிர்ந்த காற்றை சுவாசிப்பது, மனதுக்கு ஒவ்வாத வாசனையை நுகர்வது, புகை, தூது இவைகளின் ஒவ்வாமை, மலக்கட்டு, தூக்கமின்மை, சத்து குறைபாடு இவைக ளாலும், மருந்துகளின் ஒவ்வாமை, பரம்பரை யாகவும் வரலாம். மேலும் சுகாதாரமற்ற காற்றை சுவாசிப்பது, குளிர்பானங்கள், ஐஸ்கிரீம், குளிர்ந்த நீர் இவைகளின் ஒவ்வாமையாலும், கொசுவர்த்தி சுருள்களின் ஒவ்வாமையாலும், வாசனைத் தைலங்கள், தலை முடித் தைலங்கள் இவைகளின் ஒவ்வாமையினாலும், வேர்வை ஒவ்வாமை யினாலும் மூக்கடைப்பு ஏற்படலாம்.

மேலும், நாள்பட்ட நோய் நிலைகளிலும், நாள்பட்ட நோய்களுக்காக எடுத்துக் கொள்ளப்படும் ஒரு சில மருந்துகளின் ஒவ்வாமையாலும், சைனஸ் தொந்தரவு இருந்தாலும் மூக்கடைப்பு ஏற்படும்.

**விஷக் காய்ச்சல்**

விஷப்பனியால் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு பல்வேறு தொற்றால் விஷக் காய்ச்சல் ஏற்படலாம்.

சுத்தமில்லாத நீரைப் பருகுவது, கண்டகண்ட இடங்களில் சுத்தமில்லாத பாத்திரங்களில் பிடித்து வைத்திருக்கும் நீரைக் குடிப்பது, பழைய நீரைக் குடிப்பது, சுத்த மில்லாத இடங்களில் சுகாதாரமற்ற இடங்களில் உண்பது, மிகுந்த குளிருள்ள பானங்கள், குளிர் நீர், ஐஸ்கிரீம் இவைகளை உண்பது, தூக்கம் கெட்டு உடலின் சக்தி குறைவதால் ஏற்படுவது, தொடர் பனியில் நடப்பது, படுத்திருப்பது, பல்வேறு தொற்று, கொசுக்கடி போன்ற பல்வேறுபட்ட காரணங் களினால் விஷக் காய்ச்சல் ஏற்படக் கூடும்.

**மூச்சுத் திணறல் அல்லது இரைப்பு இருமல்**

பனியில் நனைவது, பனியில் படுத் திருப்பது, குளிர்ந்த காற்றில் பயணம் செய்வது, குளிர்சாதன அறையில் உறங்குவது, மாசுபட்ட கார்றறை சுவாசிப்பது, எளிதில் ஜீரணம் ஆகாத உணவு, திண்பண்டங்களை உண்பது, உண்ட உணவு செரிமானம் ஆகும் முன்பே அடுத்த வேளை உணவு உண்பது, நாள்பட்ட மலக்கட்டு, மது, புகைப்பழக்கம், மனதுக்கு ஒவ்வாத வாசனையை சுவாசிப்பது, குளிர்ச்சி தரக்கூடிய எண்ணெயை தலைக்கு தேய்ப்பது, வாசனைத் தைலங்கள், பாடி ஸ்பிரே பயன்படுத்துவது, மனஅழுத்தம் போன்ற காரணிகளால் மூச்சுத் திணறல் அல்லது இரைப்பு இருமல் ஏற்படலாம். மேலும், இது பரம்பரை நோயாகக்கூட வரலாம்.

### அனைத்திற்கும் பொதுவான மருந்து

சித்தர் விதிப்படி தினமும் இரு வேளை மலம் கழித்து, ஒத்துக் கொள்ளும் உணவு அரை பங்கு, கால் பங்கு நீர், கால் பங்கு வெற்றிடமாக வைத்து, வருடத்திற்கு இருமுறை வயிறு பேதிக்கு சாப்பிட்டு உணவு கட்டுப்பாடு, உடல் உழைப்பு, உடற்பயிற்சி, மன மகிழ்ச்சி இவைகளை ஒவ்வொருவரும் தவறாது எப்பொழுதும் கடைபிடிக்க பழக்கப்படுத்திக் கொண்டால் எல்லாக் காலமும் நமக்கு வசந்த காலமே.



நோய் வந்தபின் தீர்ப்பதைவிட நோய் வருமுன் காப்பதுதானே நல்லது. எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் இந்த மண்ணில் பிறக்கையிலே... என்ற பாடல் வரிதான் ஞாபகத்திற்கு வருகிறது.

கருவில் உருவாகும் அனைத்து குழந்தைகளுமே நலமான குழந்தைகள்தான். பிறந்தபின் வளர்ப்பு விதம், உணவு, பழக்கவழக்கங்களினாலேயே உடலும் மனதும் எண்ணமும் செயலும் மாறுபடுகிறது. காலத்தையும் நேரத்தையும் கணக்கில் கொண்டு, வரும் நோய்களை முன்னரே அறிந்து தற்காப்பு வழிமுறைகளைக் கடைபிடித்தால் நோயின்றி நலமாக வாழலாம்.

### பொதுவான மருந்துகள்

தும்மல், மூக்கடைப்பு, இருமல் இருந்தால் அமுக்கரா, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சிறுநாகப்பூ, கிராம்பு சேர்ந்த மருந்து அல்லது பச்சை கற்பூரம், தக்கோலம், இலவங்கப் பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்த மருந்து அல்லது தாளிசபத்திரி, இலவங்க பத்திரி, ஏலக்காய், சுக்கு, அதிமதுரம், பெருங்காயம், நெல்லிமுள்ளி, கோஷ்டம், திப்பிலி, சீரகம், சதகுப்பை, கருஞ்சீரகம், தேசாவரம், இலவங்கம், சாதிக்காய், மிளகு, சடாமஞ்சில், சிறுநாகப்பூ, செண்பக மொக்கு, வார்யவிடங்கம், ஓமம், கொத்துமல்லி சேர்ந்த மருந்து அல்லது சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்த மருந்துகளில் ஏதாவது ஒன்றை மருத்துவர் ஆலோசனை பெற்று அரை கிராம் முதல் 1 கிராம்வரை பால் அல்லது தேனில் குழைத்து காலை, மதியம், இரவு மூன்று வேளை சாப்பிட்ட பிறகு சாப்பிடலாம்.

சொட்டு மருந்தாக மூக்கில் இட்டுக் கொள்ள, தடவிக்கொள்ள தைமால், மென்தால், பச்சை கற்பூரத்தால் ஆன மருந்தை பயன்படுத்தலாம்.

மூக்கடைப்பு, மூச்சுத் திணறல் இருந்தால் மேற்கண்ட மருந்துகளில் ஏதாவது ஒன்றை மருத்துவர் ஆலோசனையோடு எடுத்துக் கொண்டு இத்துடன் திப்பிலி, சுக்கு, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், சித்தரத்தை, பேரரத்தை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இலவங்கம், இலவங்க பத்திரி, தாளிசபத்திரி, கொடிவேலி வேர்ப்புடை, ஏலக்காய், இலவங்கபட்டை சேர்ந்த லேகியம் அல்லது இராசயனத்தை காலை, இரவு 1 கிராம் வீதம் சாப்பிட மூக்கடைப்பு, மூச்சுத்திணறல், இருமல், தும்மல் தீரும்.

விஷக்காய்ச்சல், பனிக்காய்ச்சலுக்கு சுதர்சன மாத்திரை, சாந்த சந்திரோதய மாத்திரை, திரிகடுகு சூரண மாத்திரை, திரிதோட மாத்திரை, நிலவேம்பு மாத்திரை இவைகளில் ஏதாவது ஒன்றை மருத்துவர் ஆலோசனை பெற்று எடுத்துக்கொள்ள பனியால் வரும் பிணிகள் பறந்தோடிடுமே! ❖

# இந்திய அரசியலமைப்பு சட்டம் - ஒரு பார்வை

நெல்லை ஆறுமுகம்

இந்திய அரசியலமைப்பு சட்ட சரத்துகளில் இன்னும் சிலவற்றை பார்க்கலாம்.

### குடியரசுத் தலைவர்

குடியரசுத் தலைவர் இந்தியாவின் முதல் குடிமகன். மக்கள் பிரதிநிதிகளால் மறைமுக மாக தேர்வு செய்யப்படுகிறார். இந்திய குடிமகனாக இருப்பவர் மட்டுமே குடியரசுத் தலைவராக முடியும். நாடாளுமன்ற உறுப்பி னர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், யூனியன் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரால் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக் கப்படுகிறார். பதவிகாலம் 5 ஆண்டுகளாகும்.



குடியரசுத் தலைவர் பதவியை விட்டு தானாக விலகாம். அவரை பதவி நீக்கமும் செய்யலாம். 1998ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் மாத ஊதியம் ரூ. 50 ஆயிரமாக இருந்தது. இன்று ரூ.1,50,000 ஆக உள்ளது. பயணப்படி, தனிப்பட்ட குடும்ப செலவு, அலுவலர் செலவுகளுக்கு ஆண்டுக்கு ரூ.15,26,000 செலவு செய்யலாம்.

குடியரசுத் தலைவரின் அதிகாரப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியாது. உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்ற நீதிபதிகளை குடியரசுத் தலைவரே நியமனம் செய்கிறார். இந்திய தலைமை வழக்கறிஞர், இந்திய கணக்கு தணிக்கைத் துறை தலைவர், மத்திய பணியாளர் தேர்வாணை தலைவர், தேர்தல் ஆணையாளர், நிதி ஆணையத் தலைவர் ஆகியோரை குடியரசுத் தலைவரே நியமனம் செய்கிறார். நாடாளுமன்றத்தை கூட்டவோ, ஒத்தி வைக்கவோ இவரால் முடியும்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பண மசோதா இவரின் ஒப்புதலின்றி அமுலாக்க முடியாது. இராணுவத்தின் முப்படை தளபதியும் குடியரசுத் தலைவர்தான். இதுவரை 15 குடியரசுத் தலைவர்கள் பதவி வகித்துள்ளனர். தற்போது 16வது குடியரசுத் தலைவராக திரு.பிரணாப் முகர்ஜி பதவியில் உள்ளார்.

பாதுகாப்புத் துறை, நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்பின் தண்டனையை குறைக்கவும், ரத்து செய்யவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### துணை குடியரசுத் தலைவர்

பாராளுமன்ற இரு அவை உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படுவார். பதவிக் காலம் 5 ஆண்டுகள். ராஜ்ய சபா தலைவராக செயல்படுவது இவரின் முக்கிய பொறுப் பாகும். குடியரசுத் தலைவர் பதவி காலியாக இருக்கும் போது குடியரசுத் தலைவராக செயல்படுவார்.

### அட்டர்ஜி ஜெனரல்

இவரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார். நீதிபதியாக நியமனம் செய்ய வேண்டிய தகுதி இருப்பவரையே அட்டர்ஜி ஜெனரலாக நியமிக்க முடியும். பாராளுமன்ற இரு அவைகளிலும் பங்கு கொள்ளவோ, கூட்டத்தில் பேசவோ உரிமை உண்டு.

சட்டம் சம்பந்தமான விஷயங்களில் மத்திய அரசுக்கு ஆலோசனை கூற வேண்டும். முக்கிய வழக்குகளில் அரசுக்காக வாதாடுவார். இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங் களிலும் வாதாட உரிமை உண்டு.



**பாராளுமன்றம்**

குடியரசுத் தலைவர், மாநிலங்களவை, மக்களவை என்ற மூன்றும் ஒருங்கிணைந்த அமைப்பு பாராளுமன்றமாகும்.

மக்களவை ஆயுட் காலம் 5 ஆண்டுகள். 1971ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படுகிறது. அடுத்து 2020ஆம் ஆண்டு எடுக்கப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் முடிவுபடி மாற்றம் செய்யப்படும்.

மாநிலங்களவை ஒரு நிரந்தர அவை. இது கலைக்கப்பட மாட்டாது. பதவிக் காலம் 6 ஆண்டுகள். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்றில் ஒரு பகுதியினர் பதவி விலகுவார்கள். அதே அளவு உறுப்பினர்கள் மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுவார்கள்.

மக்களவையில் மட்டுமே நிதி மசோதா கொண்டு வரப்படும். மாநிலங்களவையில் நிதி மசோதாவை மாற்றம் செய்யவோ, ரத்து செய்யவோ முடியாது. அமைச்சரவை மீது நம்பிக்கையில்லா தீர்மானம் மக்களவையில் மட்டுமே கொண்டு வரப்படும்.

மேலவைக்கு என தனி அதிகாரம் உண்டு. புதியதாக அனைத்திந்தியப் பணி உருவாக்க மேலவையின் தீர்மானம் தேவையாகும். மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட பட்டியல் மீது மாநிலங்களவையின் தீர்மானம் தேவை. அரசியல் சட்ட திருத்தம் செய்ய மேலவையின் ஒப்புதல் தேவை.

**பாராளுமன்றக் குழுக்கள்**

1. பொது நிதி தணிக்கைக் குழு 2. மதிப்பீடு ஆய்வுக் குழு 3. பொதுத்துறை நிறுவனங்கள் செயல் ஆய்வுக் குழு 4. அவை செயல் தீர்மானிப்புக் குழு 5. அரசு சட்ட ஆய்வுக் குழு 6. பொதுமக்கள் விண்ணப்ப ஆய்வுக் குழு 7. உறுதிமொழி ஆய்வுக் குழு 8.சிறப்புரிமை முரண் ஆய்வுக் குழு

**நீதிமன்றங்கள்**

உச்ச நீதிமன்றம் நாட்டில் டெல்லியில் மட்டுமே உள்ளது. தலைமை நீதிபதியும் மற்றும் 30 நீதிபதிகளும் உள்ளனர். தலைமை



நீதிபதியை குடியரசுத் தலைவரே நியமனம் செய்வார். தலைமை நீதிபதியாக ஒன்றுக்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் குறைந்தது 5 ஆண்டுகள் நீதிபதியாக இருந்திருக்க வேண்டும்

**தலைமை கணக்காயர்**

குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுவார். மத்திய மாநில அரசுகளின் வரவு-செலவு கணக்குளை ஆய்வு செய் வார்கள். மத்திய அரசு செலவின் தணிக்கை அறிக்கையினை குடியரசுத் தலைவருக்கும், மாநிலங்களின் செலவு தணக்கை அறிக்கை யினை ஆளுநருக்கும் சமர்ப்பிப்பார்கள்.

**ஆளுநர்**

குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுவார். பதவிக் காலம் 5 ஆண்டுகள்.

**அட்வகேட் ஜெனரல்**

மாநிலத்தின் முதன்மை சட்ட அதிகாரி ஆவார். இவர் ஆளுநரால் நியமிக்கப்படுவார். மாநில அரசுக்கு சட்ட ரீதியான ஆலோசனை வழங்குவார். முக்கிய வழக்குகளில் உயர் நீதிமன்றங்களில் கலந்து கொண்டு பேசவோ, நடவடிக்கையில் பங்கு கொள்ளவோ உரிமை உண்டு.

**யூனியன் பிரதேசங்கள்**

டெல்லி, அந்தமான் நிகோபர் தீவுகள், லட்சத் தீவுகள், தாத்ரா நாகர் ஹவேலி, டாமன் டையூ, சண்டிகர், புதுச்சேரி ஆகியவை ஆகும். டெல்லி, புதுச்சேரியில் மட்டுமே சட்ட மன்றங்கள் உள்ளன. மற்ற யூனியன் பிரதேசங் களுக்கு சட்டம் இயற்ற பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

❖

# வட்டக் கிளை மாநாடுகள்

**தூத்துக்குடி**

10.12.2016 அன்று தூத்துக்குடி வட்டக் கிளை மாநாடு அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் வட்டக் கிளைத் தலைவர் தே.முருகன் தலைமையில் நடைபெற்றது. வட்டக் கிளை துணைத் தலைவர் து.அண்ணா பரமசிவன் வரவேற்றார். சிஐடியு மாவட்ட துணைத் தலைவர் இல.இராமமூர்த்தி துவக்கவுரை யாற்றினார். செயலாளர் மு.முருகன் வேலை அறிக்கையினையும், பொருளாளர் ஆர்.வைஜெயந்திமாலா நிதிநிலை அறிக்கை யும் சமர்ப்பித்தனர். மாவட்ட நிர்வாகிகள் ஞா.கலைஅரசன், ரெ.ஜெகந்நாதன், அ.பாக்கியசீலி, அ.வி.பி.விஜய் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

மாநாட்டில் தூத்துக்குடி வட்டக் கிளை தூத்துக்குடி மேற்கு, தூத்துக்குடி கிழக்கு என இரண்டு வட்டக் கிளைகளாக பிரிக்கப்பட்டன.

தூத்துக்குடி மேற்கு வட்டக் கிளை தலைவராக வாமணன், துணைத் தலைவர் களாக பழனிச்சாமி, ஆர்.வைஜெயந்திமாலா, செயலாளராக மு.முருகன், இணைச் செயலாளர்களாக பாலா, ஞானசெல்வம், பொருளாளராக விஜயகுமார் ஆகியோரும்,

தூத்துக்குடி கிழக்கு வட்டக் கிளை தலைவராக அண்ணாமலை பரமசிவன், துணைத் தலைவர்களாக அந்தோணி பட்டுராஜ், எஸ்.பி.கணேசன், செயலாளராக டி.முருகன், இணைச் செயலாளர்களாக கார்த்தி, தங்கக்கொடி, பொருளாளராக கு.சேரந்தையராஜா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாக மாவட்டத் தலைவர் மு.தமிழரசன் உரையாற்றினார். ஜோசப் சொர்ணபாண்டியன் நன்றி கூறினார்.

**வேலூர்**

**வேலூர் தெற்கு** வட்டக் கிளை மாநாடு 22.11.2016 அன்று வேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் கிளைத் தலைவர் ஏ.எஸ்.அப்துல் கலீல் தலைமையில் நடை பெற்றது. ஆ.பூசாமி வேலை அறிக்கை யினையும், மணிகண்டன் நிதிநிலை அறிக்கை யினையும் தாக்கல் செய்தனர்.

**வேலூர் வடக்கு** வட்டக் கிளை மாநாடு 23.11.2016 அன்று மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் வட்டத் தலைவர் வி.விஜயபதி தலைமையில் நடைபெற்றது. ஆரோக்கியசாமி வேலை அறிக்கையினையும், சுரேந்திரபாபு நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்தர்.

**காட்பாடி** வட்டக் கிளை மாநாடு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

புதியதாக ஆரம்பிக்கப்பட்ட **அணைக்கட்டு** வட்டக் கிளை மாநாடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 24.11.2016 அன்று நடை பெற்றது. மாவட்டச் செயலாளர் ப.இராஜாமணி துவக்கி வைத்தார். மாவட்ட துணைத் தலைவர் செ.வெங்கிடாசலம், மாவட்டப் பொருளாளர் கோ.மோகனமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர். மாவட்டத் தலைவர் க.சரவணராஜ் நிறைவுரையாற்றினார்.

**அரக்கோணம்** வட்டக் கிளை மாநாடு வி.என்.பார்த்திபன் தலைமையில் நடை பெற்றது.

**ஆற்காடு** வட்டக் கிளை மாநாடு 28.11.2016 அன்று கே.ரவி தலைமையில் நடைபெற்றது. அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் சுந்தரேசன், முன்னாள் மாநிலத் தலைவர் சிவராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

**வாணியம்பாடி** வட்டக் கிளை மாநாடு 29.11.2016 அன்று வட்டாட்சியர் அலுவலகத் தில் மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. வட்டாட்சியர் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர்.

**நாட்றாம்பள்ளி** வட்டக் கிளை மாநாடு 30.11.2016 அன்று நடைபெற்றது. இதில் புதிய வட்டக் கிளை துவக்கப்பட்டது. கே.எம்.நேரு தலைமையேற்றார். மாவட்டச் செயலாளர் பி.இராஜாமணி துவக்கவுரையாற்றினார். வட்டார வளர்ச்சி அலுவலர் சங்க மாவட்ட துணைத் தலைவர் செ.வெங்கிடாசலம்,

மாவட்ட பொருளாளர் கோ.மோகனமூர்த்தி ஆகியோர் வாழ்த்தி பேசினர். புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து மாவட்டத் தலைவர் க.சரவணராஜ் நிறைவுரையாற்றினார்.

**திருப்பத்தூர்** வட்டக் கிளை மாநாடு 30.11.2016 அன்று ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. பிரேம்குமார் வேலை அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தார்.

**குடியாத்தம்** வட்டக் கிளை மாநாடு 30.11.2016 அன்று வட்டாட்சியர் அலுவலகத்தில் கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

**வாலாஜா** வட்டக் கிளை மாநாடு 2.12.2016 அன்று வட்டாட்சியர் அலுவலகத்தில் அ.சேகர் தலைமையில் நடைபெற்றது.

**ஆம்பூர்** வட்டக் கிளை மாநாடு 5.12.2016 அன்று குமரன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டம் முழுவதும் ஏற்கனவே இருந்த 10 வட்டக் கிளை மாநாடுகளோடு புதியதாக நாட்றாம்பள்ளி, அணைக்கட்டு கிளைகள் துவக்கப்பட்டு அனைத்து கிளைகளுக்கும் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அனைத்து வட்டக் கிளை மாநாடுகளிலும் மாவட்ட நிர்வாகிகள் க.சரவணராஜ், பா.ராஜாமணி, கோ.மோகனமூர்த்தி, எஸ்.ஜோசப் கென்னடி, செ.வெங்கிடாசலம், எஸ்.ஏ.இராஜசேகரன், கே.ஆண்டாள், எஸ்.செந்தில்குமார், நா.கணபதிராஜா மற்றும் வி.விஜயபதி ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். ❖

# வாசகர் கடிதம்

“குலுங்கட்டும் திருவண்ணாமலை” தலையங்கம் படித்தேன். பொதுச் செயலாளர் மேசையிலிருந்து “அநியாயத்திற்கு எதிராய்” படித்தேன். மிகவும் சிறப்பாய் இருந்தது. மற்றபடி புத்தகத்தில் வெளியிடப்பட்ட அனைத்து தகவல்களும், செய்திகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்தது.

- **நா.தட்சிணாமூர்த்தி**,
கடலூர்

டிசம்பர் 2016 இதழில் ஆர்பாட்டம், வட்ட, மாவட்ட மற்றும் மகளிர் மாநாடுகளின் எழிச்சி படங்கள் அருமை. சன்ன இழை பின்னல்களுக்காக பரிசு பெற்ற தோழர் சேகரன் அவர்களுக்கு வாழ்த்துக்கள். வெள்ளைப் பணத்திற்காக தினமும் போராடும் மக்களிடம் கறுப்பு பணத்தை தேடும் அரசு. "தாகத்தை தீர்க்காத தண்ணீர், அரும்பசிக்கு உதவா அன்னம்" போல் வங்கியில் உள்ள பணத்தை எடுக்க வழியில்லை, நாம் உயிர்வாழ நம் உலையில் இருக்கும் சோற்றை எடுத்து பெரு முதலாளிகளுக்கு பந்தி வைக்கும் அரசுக்கு எதிராய் கிளர்ந்து எழுவோம். மலையாய் வந்த பிரச்சனைகளை திட்டமிட்டே தகர்த்து எரிந்து வளர்ந்துள்ளோம்! தீர்மானிக்கும் சக்தி என்பதை அரசுக்கு உணர்த்துவோம்.

- **சி. பாலசுப்ரமணியன்**,
நாகப்பட்டினம்

# மண்டல கருத்தரங்கம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் மண்டல கருத்தரங்கம் 10.12.2016 அன்று நடை பெற்றது. இதில் தஞ்சாவூர், புதுக்கோட்டை, அரியலூர் மாவட்ட ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். மாவட்டத் தலைவர் ஜி.கோவிந்தராஜ் தலைமையேற்றார். மாவட்டச் செயலாளர் கி.ரெங்கசாமி வரவேற்றார். மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.





# துறைவாரி சங்க நிகழ்வுகள்

தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம உதவியாளர் சங்கத்தின் சார்பில் வருவாய்த் துறை கிராம உதவியாளர்களுக்கு ஊதியக் குழுவால் வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும், சதவிகித அடிப்படையில் பொங்கல் போனஸ் வழங்கிட வேண்டும், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து 26.11.2016 அன்று கரூரில் நடைபெற்ற மாநில செயற்குழு முடிவின்படி தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக...

**நாகப்பட்டினம்**

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக 4 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைவர் எம்.பன்னீர்செல்வம் தலைமையில் 20.12.16 மாலை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் டி.அண்ணாதுரை வரவேற்றார். மாவட்டச் செயலாளர் டி.பால்ராஜ், மாநில செயற்குழு உறுப்பினர் எஸ்.மோகன் ஆகியோர் கோரிக்கை விளக்கவுரையாற்றினர்.

அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன்சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன் மற்றும் கிராம உதவியாளர் சங்க மாநிலச் செயலாளர் சுகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்டப் பொருளாளர் எஸ்.ஜெயச்சந்திரன் நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.



**கரூர்**

கரூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் மு.சுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர் லட்சுமி, துணைத் தலைவர்கள் ஏ.அரசகுமார், அருண்குமார், இணைச் செயலாளர்கள் எம்.சுரேஷ்குமார், கே.இளமதி, கே.தேவிமனோகரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிராம நிர்வாக அலுவலர் சங்கத்தின் டி.துரைகுமாரசாமி, கிராம நிர்வாக அலுவலர் முன்னேற்ற சங்கத்தின் வி.வேலுச்சாமி, அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எம்.மகாவிஷ்ணன், மாவட்டச் செயலாளர் எம்.சுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம், மாவட்ட நிர்வாகிகள் கே.சக்திவேல், என்.சந்திரன், பி.பால கிருஷ்ணன், வட்ட நிர்வாகிகள் ஆர்.நாராயணன், எல்.பாலசுப்பிரமணியன், ஆர்.குப்புசாமி, கே.செல்லமுத்து ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநிலச் செயலாளர் கே.கருணாகரன் கோரிக்கை விளக்கவுரை யாற்றினார். மாவட்ட பொருளாளர் பி.மனோகரன் நன்றி கூறினார்.

**தமிழ்நாடு அரசு தொழிற் பயிற்சி அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படை ஊழியர் சங்கம்**

சங்கத்தின் 3வது மாநில மாநாடு காஞ்சிபுரம் மாவட்ட செங்கற்பட்டில் உள்ள ஐடிஐ வளாகத்தில் மாநிலத் தலைவர் எம்.கருப்பசாமி தலைமையில் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் ச.இ.கண்ணன் துவக்கவுரையாற்றினார். சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆர்.ரவி வேலை அறிக்கையினை யும், சாலக்குமார் நிதிநிலை அறிக்கையினை யும் தாக்கல் செய்தனர். மகளிர் துணைக் குழு அறிக்கையினை சி.யமுனா தாக்கல் செய்தார். அரசு தொழிற் பயிற்சி அலுவலர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியம், தலைமை நிலைய செயலாளர் எம்.பாரிவள்ளல், அரசு ஊழியர் சங்க நிர்வாகி முத்து ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் மாநிலத் தலைவராக எம்.கருப்புசாமி, பொதுச் செயலாளராக ஆர்.ரவி, பொருளாளராக எம்.சாலகுமார், துணைத் தலைவர்களாக எஸ்.மாசாணமுத்து, பி.வேலுமணி, ஆர்.கோவிந்தன், சி.சரவணன், எம்.செந்தமிழ் செல்வன், செயலாளர்களாக சி.யமுனாதேவி, எம்.கிட்டப்பா, வி.ரவி, எம்.மோகன், மாநில அமைப்புச் செயலாளராக கே.சாந்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார். மண்டல செயலாளர் களாக கே.பாலசுப்பிரமணியம் (மதுரை), எம்.ஞான சேகரன் (கோவை), கே.கலைச் செல்வன் (திருச்சி), எஸ்.நவநீத கிருஷ்ணன் (நெல்லை), எம்.செல்வராஜ் (சென்னை) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு தொழிற் பயிற்சி அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் சி.ராமலிங்கம் நிறைவுரையாற்றி னார். சி.சரவணன் நன்றி கூறினார். ❖









ஈரோட்டில் நடைபெற்ற அரசு ஊழியர் சங்கத்தின் 12வது மாவட்ட மாநாட்டு படங்கள்

## சாத்தூரில் ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்ட செயற்குழு முடிவின்படி வாரம் ரூ. 24,000 பாரத ஸ்டேட் வங்கி சேமிப்பு கணக்கிலிருந்து வழங்கக் கோரி 22.12.2016 அன்று மாலை சாத்தூர் - மதுரை பேருந்து நிலையம் அருகில் சங்கத்தின் சாத்தூர் வட்டக் கிளை சார்பில் வட்டக் கிளை துணைத் தலைவர் செல்லபாண்டியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் சிவக்குமார் விளக்கவுரையாற்றினார். சத்துணவு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் ஆர்.அய்யம்மாள், ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி வட்டச் செயலாளர் இராஜேஸ், ஊரக வளர்ச்சித் துறையின் மாவட்ட இணைச் செயலாளர் கோபால், போக்குவரத்து ஊழியர் சங்க வட்டாரச் செயலாளர் பாலசுப்பு ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாநிலச் செயலாளர் ச.இ.கண்ணன் நிறைவுரையாற்றினார். அனைத்துத் துறை ஊழியர் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர். கிளை பொருளாளர் இராஜா நன்றி கூறினார். இதில் துறைவாரி மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தி பேசினர்.

## தோழர் பிடல் காஸ்ட்ரோ

புரட்சியில் பிறந்து
புதுமைகள் படைத்து
கியூபா மக்களுக்கு
இலவச கல்வி, மருத்துவம் வழங்கி
உலக சாதனை படைத்த
தோழர் பிடல் காஸ்ட்ரோ அவர்கள்.

வேடிக்கை முதலாளித்துவ
சதிகளை பலமுறை சந்தித்து
தோழர் பிடல் காஸ்ட்ரோ
மண்ணை விட்டு பிரிந்தாலும்
விண்ணில் பிரகாசிக்கும்
புரட்சி நட்சத்திரமாய்
மார்க்சிய கருத்துகளை பிரகாசிக்கும்
தோழர் பிடல் காஸ்ட்ரோ
என்றும் புரட்சியின் புதுமையே.

- நெல்லை செல்வம்

# வேளாண்மைத் துறையில் நேரடி உதவியாளர் நியமனம் தேவையா?

*"ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை*
*ஊக்கார் அறிவுடையார்"*

இரா. பன்னீர்செல்வம்

என்ற குறளுக்கேற்ப இருப்பதை இழக்காமல் வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர்கள் செயல்பட வேண்டிய காலம் இது.

வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, வேளாண் வணிகம், வேளாண்மை பொறியியல்துறை, விதைச்சான்றுத் துறை ஆகிய துறைகளில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்கு ஒரே முன்னுரிமையாகும். இந்தத் துறைகளில் 30 சதவீதம் உதவியாளர் பணியிடங்களை நேரடியாக நியமனம் செய்ய அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசின் தரப்பில் கூறும் காரணம் காலியிடங்களை நிரப்புவதற்கான நிரந்தர ஏற்பாடு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடங்கள் மட்டுமே நேரடியாக தேர்வாணை/கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறது. உதவியாளர், கண்காணிப்பாளர், ஆட்சி அலுவலர் ஆகிய பணியிடங்கள் முறையே பதவி உயர்வு மூலம் நிரப்பப்படுகிறது. தற்போது இத்துறையில் இளநிலை உதவியாளராக பணியில் சேரும் ஒருவர் கண்காணிப்பாளர் பதவி உயர்வு பெறுவதற்கு குறைந்தது 25 வருடங்களாகிறது.

### உதவியாளர் பணியிடம் தற்போது காலியாக இருப்பதற்கான காரணம்

இந்த ஐந்து துறைகளிலுமே தற்போது சுமார் 490 உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இதில் 200 இளநிலை உதவியாளர்/தட்டச்சர்களுக்கு பதவி உயர்வு அளிக்க பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் பட்டியல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கிறோம். இது தவிர மேலும் சுமார் 300 இளநிலை உதவியாளர்கள் பதவி உயர்விற்கு தகுதியானவர்கள் உள்ளனர். ஆனால் இவர்களுக்கு இரண்டாண்டு கடந்து பவானிசாகர் அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டதால் இதற்கு விலக்கு அளிக்கக்கோரி ஒவ்வொருவருக்கும் தனித்தனியான கருத்துரு அனுப்பப்பட்டு அரசிடம்/வேளாண்மை இயக்குநரிடம் நிலுவையில் உள்ளது. இதனால்தான், தகுதியிருந்தும் உதவியாளர் பதவி உயர்விற்கு செல்ல இயலாமல் உள்ளனர். இளநிலை உதவியாளர்களுக்கு இரண்டாண்டிற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சி முடிக்க வேண்டும் என்ற விதிமுறையை உருவாக்கிய அரசால் இரண்டாண்டிற்குள் பயிற்சி அளிக்க இயலவில்லை.

இதனால் பாதிக்கப்படுவது அமைச்சுப் பணியாளர்கள். தற்போது கூட இத்துறையில் சுமார் 500 இளநிலை உதவியாளர்/தட்டச்சர்கள் பவானிசாகர் அடிப்படை பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. இவர்களை பயிற்சிக்கு அனுப்புவதில் அமைச்சுப் பணியாளர் சங்கம் தொடர்ந்து முயற்சியெடுத்து வருகின்றது. இந்த காரணங்களால்தான் உதவியாளர் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்ப இயலவில்லை. இதன்படி உதவியாளர் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பாததற்கு அரசின் நிர்வாகக் காரணங்கள் ஆகும். இதற்கு ஊழியர்கள் பொறுப்பல்ல.

### உதவியாளர் நேரடி நியமனத்தால் ஏற்படும் பாதிப்பு

இத்துறையில் வருடந்தோறும் மார்ச் 15ஆம் தேதியை கணக்கில் எடுத்துக்கொண்டு உதவியாளர் பதவி உயர்வு பட்டியல் வேளாண்மை இயக்குநரால் தயாரிக்கப்பட்டு

இளநிலை உதவியாளர்/தட்டச்சர்களுக்கு முறையான பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. இதில் 30 சதவீத உதவியாளர்கள் நேரடி நியமனத்தால் நியமிக்கப்பட்டால், இளநிலை உதவியாளர்/தட்டச்சர்களின் பதவி உயர்வு மிகவும் பாதிக்கப்படும். பல இளநிலை உதவியாளர்/தட்டச்சர்கள், உதவியாளர் நிலையிலேயே ஓய்வு பெறும் நிலை ஏற்படும். தற்போது பதவி உயர்வின் மூலம் உதவியாளர் பணியிடம் நிரப்பப்படுவதால், அரசின் அனுமதி தேவையில்லை. ஆனால் நேரடி நியமனத்திற்கு அரசின் ஒப்புதல் பெற வேண்டும். உதவியாளர் பணியிடம் 30 சதவீதம் நேரடியாக நியமனம் செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தால், இந்த நேரடி நியமனத்திற்கு அரசாணை எண்.123 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்: 10.9.2009-ன்படி ஒவ்வொரு ஆண்டும் அரசின் ஒப்புதல் பெற வேண்டும். உதாரணமாக 200 உதவியாளர் பணியிடம் காலி ஏற்பட்டால் அதில் 30 சதவீதமான 60 பணியிடங்களை நேரடியாக நியமனம் செய்ய, வேளாண்மை இயக்குநரால் அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அது பணியாளர் குழுவினால் (Staff Committee) ஒப்புதல் அளித்தபிறகு, அரசாணை வெளியிடப்படும். அதன்பிறகு இந்தப் பணியிடங்களுக்கு தேர்வாணைக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, தேர்வாணையத்தால் பின்னர் தேர்வு நடத்தி இந்த 60 பணியிடங்களில் உதவியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இதற்கு குறைந்தது ஒரு வருட காலமாகும். இதற்குள் மேலும் 200 காலிப் பணியிடங்கள் ஏற்பட்டு விடும். இதன்படி 30 சதவீத காலிப் பணியிடம் நிரந்தர காலிப் பணியிடமாக மாறும்.

மேலும் தற்போது ஒவ்வொரு வருடமும் முறையான பதவி உயர்வு பட்டியல் வெளியிடப்படுகிறது. இதில் நேரடி நியமனம் புகுத்தப்பட்டால் அதன் நிலை மாறிவிடும். ஏனெனில் நேரடி நியமனத்திற்கு ஒவ்வொரு வருடமும் அரசிடம் ஒப்புதல் பெறவேண்டிய நிலையில் அதன் ஒப்புதல் கிடைத்தபிறகே அந்த ஆண்டிற்கான பதவி உயர்வு பட்டியலும் வெளியிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு பதவி உயர்வு பட்டியல் அங்கீகரித்து வெளியிடுவதில் மிகவும் தாமதம் ஏற்படும். சில நேரங்களில் பதவி உயர்வு பட்டியல் வெளியிடுவதில் வருடக்கணக்கில் தாமதம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. நேரடியாக உதவியாளர்கள் நியமனம் செய்த பின்னர் அதன் பணி விதி, மூதுரிமை ஆகியவற்றில் பிரச்சனை ஏற்படும். நேரடி நியமனம் செய்யும் சில துறைகளில் மூதுரிமைக்காக நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு வழக்குகள் நிலுவையினால் பதவி உயர்விற்காக போராட்டம் நடத்தும் நிலைகளை நாம் அறிந்துள்ளோம். உதவியாளர் பதவி உயர்வு மட்டுமல்ல; கண்காணிப்பாளர், ஆட்சி அலுவலர் பதவி உயர்வு பட்டியல் அங்கீகரித்து வெளியிடவும் மிகுந்த தாமதம் ஏற்படும். எனவே வேளாண்மைத் துறையில் நேரடி உதவியாளர் நியமனம் பொருத்தமற்றதாகும். ஊழியர்களுக்கோ, நிர்வாகத்திற்கோ எவ்வித பயனும் இல்லை.

உதவியாளர் பணியிடம் நேரடியாக நியமனம் செய்தால், அமைச்சுப் பணியாளர்களின் பதவி உயர்வில் தாமதம் ஏற்பட்டு பணப்பலம் இழப்பு ஏற்படும். காலிப் பணியிடம் நிரந்தர காலிப் பணியிடமாக மாறும். எனவேதான், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் 24.9.2016 தேதிய மாநில செயற்குழுவில் நேரடி உதவியாளர் நியமனத்தை கைவிடக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தோழர்களே,

***“அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்***
***ஊதியமும் சூழ்ந்து செயல்”***

என்ற குறளுக்கேற்ற விளைவுகளை கணக்கில் கொண்டு செயலில் இறங்க வேண்டிய தருணத்தில் நாம் இருப்பதால் ஒன்றுபட்ட போராட்டத்திற்கு தயாராவோம்.

❖

# ஒவ்வொரு போராட்டமும்

ஒரு தீபம்
இருட்டை
விலக்கலாம்!

ஒரு தீப்பொறி
காட்டை
அரிக்கலாம்!

ஒரு கவிதை
நம் மனதில்
தத்துவப் புனலை
புகுத்தலாம்!

ஒரு வார்த்தை
நம் உயிரில்
லட்சியக் கனலை
விதைக்கலாம்!

ஒவ்வொரு
பிரார்த்தனையும்
ஒரு வார்த்தையில்
இருந்தே!

ஒவ்வொரு
பயணமும்
ஒரு அடியில்
இருந்தே!

ஒவ்வொரு
விருட்சமும்
ஒரு விதையில்
இருந்தே!

ஒவ்வொரு
தீயும் ஒரு
தீப்பொறியில்
இருந்தே!

ஒரு நம்பிக்கை
நமது ஊக்கத்தை
உயர்த்தலாம்!
ஒரு தீப்பொறியே!

ஒரு லட்சியம்
நமது தூக்கத்தைத்
துரத்தலாம்!

ஒரு நட்சத்திரம்
கடலில் கப்பலுக்கு
வழி காட்டலாம் !

ஒரு கைதட்டல்
பேச்சாளனை
இயக்கத்தின்
வழிகாட்டியாக்கலாம் !

ஒரு பூ
ஒரு கனவை
விழிப்புறச் செய்யலாம் !

ஒரு மரம்
ஒரு காட்டின்
தொடக்கமாயிருக்கலாம் !

ஒரு புன்னகை
ஒரு நட்பை
தோற்றுவிக்கலாம்!

ஒரு வாக்கு
ஒரு நாட்டை
மாற்றிக்காட்டலாம் !

இவை போலவே...
இவை போலவே...

ஒரு போராட்டம்
நம் உரிமைகளை
வென்று காட்டலாம்!

ஒவ்வொரு
போராட்டமும்
நம் உரிமைகளை
உயிர்ப்புடன்
வைக்கலாம் !

- **ஜிஜி**